
# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 10: இதழ் 3 | பெப்ரவரி 1958 | விலை சதம்: 15




## அட்டைப் படம்



இலங்கையில் சிறைவைக்கப்பட்டிருந்த முதல் ஆங்கிலேயனுன ரொபர்ட்நொக்ஸ் என்பான் இலங்கையைப்பற்றியும், அதன் மக்களைப்பற்றியும் விபரமாக விளக்கும் ஓர் அரிய நூலை எழுதியிருக்கிருன். கண்டிமன்னர்காலத்தில் மக்கள் வாழ்ந்தவிதத்தை விளக்கமாக எழுதும் ரொபர்ட் நொக்ஸ், சிங்கள மக்கள் நீர் கொண்டு செல்லவும், சமைக்கவும், அவிக்கவும், பொரிக்கவும் உகந்த பலவித மட்பாண்டங்களைச் செய்வதில் வல்லவர் எனக் குறிப்பிட்டிருக்கிருன். " மத்தியகால சிங்களக்கலை " எனும் அரியபெரியதோர் நூலை எழுதிய கலாஞானி ஆனந்தக்குமாரசுவாமியாரும், இந்நாட்டு மட்பாண்டங்களின் அமைப்பைப்பற்றியும், வனையும் முறையைப்பற்றியும் விரிவாக எழுதியுள்ளார். இந்நாட்டின் மட்பாண்டத் தொழிலின்சிறப்புக்கு இவர்களின் நூல்கள் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. இவ்வருடம் ஜனவரி மாதம் 22 ந் திகதியன்று கொழும்பில் கலாபவனத்தில் நடைபெற்ற மட்பாண்டக் கண்காட்சியைத் திறந்துவைத்த மகாதேசாதிபதி சர். ஒலிவர் குணத்திலகா, "இலங்கையின் மட்பாண்டங்கள் சர்வ லட்சணங்களும் பொருந்தியிருக்கின்றன" வெனக் குறிப்பிட்டிருக்கிருர் அரசாங்கம் சிறப்புமிக்க இத்தொழிலை அபிவிருத்தி செய்ய பலவித நடவடிக்கைகளை யெடுத்து வருகின்றது. அட்டைப்படம் அழகியமட்பாண்டங்கள் சிலவற்றைச் சித்திரிக்கின்றது.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வெள்ளக் கஷ்ட நிவாரணத்துக்குத் தாராளமாக உதவுங்கள் .. | 3 |
| 2. | பிரதமர் வெள்ள அகதிகளைச் சந்தித்து ஆறுதல் கூறினர் .. | 5 |
| 3. | வெள்ள நிவாரணத்துக்கு உதவியவர்களுக்குப் பிரதமரின் நன்றி .. | 9 |
| 4. | ஈழத்தில் நாடகம் .. .. .. .. | 11 |
| 5. | ஆனையிறவு .. .. .. .. | 15 |
| 6. | ஸ்ரீல ஸ்ரீ சிவசங்கரபண்டிதர் .. .. .. | 16 |
| 7. | காணி அமைச்சின் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை .. .. | 19 |
| 8. | அலங்காரரூபன் .. .. .. .. | 21 |
| 9. | பிரிட்டிஷ் பிரதமருக்கு குதூகல வரவேற்பு .. .. | 24 |
| 10. | வீரத்துறவி விவேகானந்தர் .. .. .. | 26 |
| 11. | புதிய வண்டு விடுதூது .. .. .. .. | 29 |


J. N. B 2331—5.508 (2/58)



மட்டக்களப்பு வெள்ளத்தால் மூடப்பட்டிருந்த காட்சி.

# வெள்ளக் கஷ்ட நிவாரணத்துக்குத் தாராளமாக உதவுங்கள்

### பிரதமரின் வானொலிப் பிரசங்கம்

எமது நாடு எதிர்பாராத ஒரு பேராபத்தில் சடுதியாகச் சிக்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையின், அநேக பாகங்களில், குறிப்பாக அனுராதபுரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், பொல்லனறுவை, குருநாகல், மன்னார், வவுனியா, புத்தளம், மாத்தளை, கண்டி, பதுளை, அம்பாந்தோட்டை ஆதிய பிரதேசங்களில் என்றும் இல்லாத வகையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக பலர் உயிர் இழந்துள்ளனர். நமக்கு இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி இறந்தவர்கள் தொகை அவ்வளவு அதிகமில்லை. ஆனால் 200,000 த்துக்கும் அதிகமான மக்கள், குறிப்பாக வடமத்திய, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிப்பவர்கள் வீடுகளையும், உடமைகளையும் இழந்து தவிக்கின்றனர்.

இந்தத் துரதிர்ஷ்டத்துக்குள்ளானோரில் அநேகர் தமது கஷ்டங்களைத் தைரியத்துடனும், துணிவுடனும் சமாளித்தனரென்றும், பீதிக்கோ, தடுமாற்றத்துக்கோ அவர்கள் இடமளிக்கவில்லையென்றும் இதுவரை கிடைத்துள்ள தகவல்களால் அறியக்கூடியதாயிருக்கின்றதென்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

### விசேஷ கமிட்டி

நிலைமையைச் சமாளித்தற்குச் சாத்தியமான ஒவ்வொரு நடவடிக்கையையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. நிலைமையுடன் சம்பந்தப்பட்ட சகல பிரச்சினைகளையும் சமாளிப்பதற்கு நிதி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. சரத் விஜேசிங்ஹ அவர்களின் தலைமையில் ஒரு விசேஷ

கமிட்டி நிறுவப்பட்டுள்ளது. இக்கமிட்டியில் உள் நாட்டலுவல் அமைச்சு, காணி, காணி அபிவிருத்தி அமைச்சு, வெளி நாட்டலுவல் அமைச்சு, போக்கு வரத்து அமைச்சு, தொழில், சமூக சேவை அமைச்சு, விவசாய உணவு அமைச்சு, தபால் தந்திப் போக்கு வரத்து அமைச்சு, சுகாதார அமைச்சு என்பன வற்றின் பிரதிநிதிகளும் கல்லோயாச் சபைப் பிரதி நிதியொருவரும் அங்கத்தவர்களாயிருக்கின்றனர். திரு. ஷெர்லி அமரசிங்ஹ அவர்கள் விசேஷ கொமி ஷனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### விமான சேவை

வெள்ளநீரால் நாற்புறமும் சூழப்பட்டுத் திண் டாடும் மக்களுக்கு உணவனுப்புதல், போக்குவரத்து தெருச்சேவை, புகையிரதச் சேவை, தந்தி டெலிபோன் வசதிகள் என்பனவற்றைச் சீர்ப்படுத்து தல் என்பனவே உடனடியாகக் கவனிக்கப்பட்டுவரும் பிரச்னைகளாகும். டிசம்பர் மாதம் 27 ந் திகதி காலை தொடக்கம் ஹறுலுவேவா, தபோவா, கல் லோயா, பொல்லனறுவை, விலகமுவை, மாத்தளை, மின்னேரி, அம்பாறை, முருங்கன் பிரதேசங்களில் பாண் முதலியன அடங்கிய உணவுப் பொருட்கள் விமானமூலம் வழங்கப்படுகின்றன. மட்டக்களப்பு, கல்முனை மாவட்டங்களுக்கும் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன. எயர் சிலோன், றேயல் இலங்கை விமானப் படை, றேயல் விமானப்படை என்பவற்றின் விமானங்கள் உணவு வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியப் பிரதம மந்தி ரிக்கு நான் விடுத்த ஓர் அவசர வேண்டுகோளுக் கிணங்க, இந்திய அரசாங்கம் பொருட்களைக் கீழே போடும் உபகரணங்கள் உள்ள மூன்று டக்கோட்டா விமானங்களை வைத்திய பரசூட் படையினருடன் அனுப்பியுள்ளது. ஒரு ஹெலிகொப்டரையும், சில டிங்கிகளையும் (படகுகள்) அனுப்புவதற்கு இந்திய அரசாங்கம் முயன்று வருகிறது. கனடா அரசாங்கத் துக்குரிய விமானமொன்று எங்கள் உபயோகத்துக் காக விடப்பட்டுள்ளது. இந்த உடனடியான உதவிக் காக இந்தியாவுக்கும், கனடாவுக்கும் நாங்கள் கடப் பாடுடையோம்.

### உதவுக

பல்வேறு அரசியல் கட்சிகளும் சங்கங்களும் பண உதவிகளையும் வேறு பல உதவிகளையும் செய்ய முன் வந்திருக்கின்றன. பணம் அனுப்புபவர்கள் யாவ ரும் விசேஷ கொமிஷனர், றேயல் சிலோன் கடற் படைத் தலைமைக் காரியாலயம், பிளாக் ஸ்டாவ் **(Flag Staff)** வீதி, கொழும்பு என்ற விலாசத் துக்குத் தமது பணத்தை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். வேறு உதவிகளை அளிக்க விரும்புவோரும் விசேஷ கொமி ஷனரிடம் அவற்றை அளிக்கலாம். இதனால் எல்லா வற்றையும் ஒன்று சேர்த்து மிகவும் பயனுள்ள முறையில் உபயோகப்படுத்துவது சுலபமாகும். இந் தக் கஷ்டமான நேரத்தில் தங்களால் இயன்ற எவ்வளவு உதவியையும் அளிக்க முன்வரும்படி சகல அரசியல் கட்சிகளையும், சங்கங்களையும், தனி நபர்களையும் வேண்டிக் கொள்ளுகிறேன். அண்டை நாடுகளையும், உலகிலுள்ள இதர நாடுகளையும் தங்க ளால் இயன்ற உதவியளிக்கும்படி நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### கடமைகள்

கொழும்புத் துறைமுகம் போன்ற அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களும் அச்சேவைகளை, இயன்றளவு திறமையாகச் செய்யவேண்டுமென நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்நேரத்தில் இவ்விதம் சேவை செய்வதன் மூலமே அவர்கள் நாட்டுக்கு உதவக் கூடும்.

தொந்தரவுகளும், கஷ்டங்களும் தனிப்பட்ட நபர் களையும் தேசங்களையும் காலத்துக்குக் காலம் எதிர் நோக்குகின்றன. எங்கள் நாடு இதுவரை தன்னை எதிர்நோக்கிய அநேக தொந்தரவுகளையும், கஷ்டங் களையும் சமாளித்து வெற்றியீட்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்திலும், எமக்கு ஏற்பட்டுள்ள தொந்தரவு களை மக்கள் சமாளிப்பதோடு, அதிக தைரியமும் ஒற்றுமையுமுள்ளவர்களாகி, நாம் எல்லோரும் விரு ம்பும் அபிவிருத்தியும், சுபீட்சமும் நிறைந்த பாதை யை நோக்கி மேலுமதிக உறுதியுடன் முன்னேறு வார்களென நான் நிச்சயமாக நம்புகிறேன்.

---

## வெள்ள அகதிகளுக்கு இலவச ஜவுளி

இலங்கையில் தயாரிக்கப் பெற்ற 300,000 சாரங் களையும் 150,000 பெனியன்களையும், 150,000 ரவுக்கைகளையும் வெள்ள அகதிகளுக்கு இலவசமாக விநியோகஞ் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

200,000 சாரங்களும் எல்லா பெனியன்களும் ரவுக்கைகளும் குடிசைக் கைத்தொழிற் பகுதியால் வழங்கப்பட்ட பொருட்களைக் கொண்டு அத்திடியாவி லுள்ள "டயா" ஷேர்ட் தொழிற்சாலையில் இலவச மாகத் தயாரிக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் பல்வேறு ஜவுளிப் பயிற்சி நிலையங் களிலும் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிகளை வெள்ள அகதிகளுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கு உள் நாட்டு விவகார மந்திரி அவர்கள் அரசாங்க மாகாண அதிபர்களுக்கு ஏற்கனவே அதிகாரமளித்துள்ளார்.

# பிரதமர் வெள்ள அகதிகளைச் சந்தித்து ஆறுதல் கூறினர்


## நிவாரண வேலைகள் மும்முரமாக நடைபெறுகின்றன


வெள்ளப் பிரதேசங்களைப் பார்வையிடுதற்காக இலங்கை முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்த பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா அவர்களுக்கு வட இலங்கை, கிழக்கிலங்கை மக்கள் ஆங்காங்கு அமோக வரவேற்பளித்தார்கள். அரசியல் வேற்றுமைகள் வகுப்பு வேற்றுமைகள் யாவற்றையும் மறந்து இப்பகுதிகளில் பெரும் பான்மையாக வசிக்கும் தமிழ்பேசும் மக்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு நின்று பிரதமரை வரவேற்ருர்கள்.

யாழ்ப்பாணத்தில் பாராளுமன்றப் பிரதிநிதிகள் யாவரும் (இருவரைத் தவிர) பிரதமரை வரவேற்க வந்தனர். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கொழும்பில் நின்றதால் வரவேற்பில் கலந்து கொள்ளவில்லை. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் வரவேற்பில் கலக்கவில்லை.


வவுனியாவில் திரு. ஸி. சுந்தரலிங்கம் பிரதமரை அன்புடனும் ஆதரவுடனும் வரவேற்ருர். அரசாங் கம் ஆபத்துவேளையில் தமது தொகுதி மக்களுக்கு விரைந்து செய்த பேருதவிகளைக் குறிப்பிட்டு அவ்

**கல்லோயா வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப்பதைப் பார்வையிடச் சென்ற பிரதமர் அம்பாரையில் வெள்ள அகதிகளைப் பார்த்துப் பேசுகிருர்.**





பிரதமர் அம்பாரையில் வெள்ளப் பிரதேசங்களைப் பார்வையிடுகிறார்.




யாழ்ப்பாண வெள்ளச் சேதத்தைப் பார்வையிடச் சென்ற பிரதமர் பலாலி விமான நிலையத்தில் இறங்கிச் செல்லும் காட்சி.


வுதவிகள் மட்டும் கிட்டியிராவிட்டால் தமது தொகுதி மக்கள் இன்னும் அதிக இன்னல்களுக்காளாகியிருப்பர் எனக் குறிப்பிட்டார். திரு. சுந்தரலிங்கம் தமது பேச்சின் முடிவில் சிங்கள மொழியிலும் ஒரு பேச்சு நிகழ்த்தினார். மன்னாரில் காணி, காணி அபிவிருத்தி மந்திரி திரு. ஸி. பி. டி. ஸில்வா அங்கு திரண்டிருந்த மக்கள் முன் தமிழ் மொழியில் ஓர் உரை நிகழ்த்தியதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

சுற்றுப் பிரயாணத்தின்போது நடைபெற்ற பல்வேறு கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றிய பிரதம மந்திரி அவர்கள் தேசத்துக்கேற்பட்ட துரதிர்ஷ்டத்திலிருந்து ஒரு நன்மை பிறந்திருக்கிறதென்றும், அதாவது, வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட சேதத்தைச் சீர்ப்படுத்தும் வேலையில் சகோதரர்களைப்போல் பல்வேறு சமூகத்தவரும் தோளோடு தோள் நின்று உழைக்கக்கூடிய நல்லெண்ணம் அவர்களுக்கிடையில் காணப்படுகிறதென்றும் கூறினார். நாடு சந்தோஷத்தையும் சுபீட்சத்தையும் நோக்கி வெற்றி நடைபோடக்கூடியதாக மக்கள் தங்கள் நட்புறவை மென்மேலும் வளர்க்கவேண்டுமென்றும் அவர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் கஷ்டத்துக்குள்ளானவர்களுக்கு நிவாரணமளிக்கவும் அவர்களைப் புனருத்தாரணஞ் செய்யவும் நீர்ப்பாசனத் திட்டங்கள், புகையிரதப் பாதைகள், மோட்டார்ப் பாதைகள் ஆதியனவற்றைப் பழுதுபார்க்கவும், அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் இப்பொழுது மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

உணவுப் பார்சல்கள், அரிசி, பாண், தகரத்திலடைக்கப்பட்ட பால், சீனி முதலியவற்றையும் உருளைக் கிழங்கு, பருப்பு, கருவாடு ஆதியாம் சரக்குகளையும், மருந்துச் சாமான்களையும், ஏராளமான துணிமணிகளையும் கொண்ட பத்து இலட்சம் இருத்தலுக்கு மேற்பட்ட பொருட்கள், வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட பிராந்தியங்களுக்கு விமான மார்க்கமாகக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. நீர்ப்பாசனப் பகுதி, கட்டுவேலைப் பகுதி, புகையிரதப் பகுதி, சௌக்கியப் பகுதி, சமூக சேவைப் பகுதி ஆதியனவற்றால் உடனடியாக புனருத்தாரண வேலை மேற்

வவுனியாவின் வெள்ளச் சேதத்தை நேரில் கண்டறியச் சென்ற பிரதமரை திரு. சி. சுந்தரலிங்கம் வரவேற்கிறார்.



கொள்ளப்படும்பொருட்டு அரசாங்கம் பணம் கொடுத்திருக்கிறது. இப்பகுதிகளின் உத்தியோகத்தர் சேதத்துக்குள்ளான இடங்களுக்கு விரைந்து சென்று புனருத்தாரண வேலையை ஆரம்பித்திருக்கின்றனர்.

எமக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைச் சீர்ப்படுத்துவதற்கு உலகெங்குமுள்ள அநேக நாடுகள் தாராளமான உதவியளித்துள்ளன. இவற்றில் அவுஸ்திரேலியா, பர்மா, கனடா, எதியோப்பியா, ஜெர்மனிய சமஸ்டிக் குடியரசு, பிரான்ஸ், இந்தியா, இத்தாலி, ஜப்பான், மலாயா, பாகிஸ்தான், சிங்கப்பூர், ஐக்கிய நாடுகள் என்பவற்றின் அரசாங்கங்கள் அடங்கும். வேறு பல நாடுகளின் அரசாங்கங்களும் உதவியளிக்க முன்வந்துள்ளதுடன், எவ்விதமான உதவி வேண்டுமென்று இலங்கை அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றன.


பெருந்தொகையான வெளிநாட்டுத் தாபனங்களும் உதவியனுப்பியுள்ளன. இவற்றுள் அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம், நெதர்லாந்துச் செஞ்சிலுவைச் சங்கம், சோவியத் ரஷ்ய செஞ்சிலுவைச் சங்கம், கவ் அன் கேட் கொம்பனி லிமிட்டெட் என்பனவும் அடங்கும்.


தேசீய வெள்ள நிவாரண நிதிக்கு வசூலான பணம் ஜனவரி 8ந் திகதியன்று பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்டு விட்டது.

ஜனவரி 3 ந் திகதி வரை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விமானமூலம் கொண்டு செல்லப்பட்ட உணவுப் பொருட்களின் தொகை பின்வருமாறு :—.

பாண்—314,090 இருத்தல் ; பலசரக்கு வகைகள்—507,410 இருத்தல் ; சமைத்த உணவுகள்—3,000 இருத்தல் ; மருந்து வகைகள்—8,330 இருத்தல் ; உணவும் உணவுப் பொருட்களும், புடவைகளும் (ஜூனியர் சேம்பர் ஒவ் கொம்மர்ஸ் அனுப்பியவை)—40,050 இருத்தல் ; செஞ்சிலுவைச் சங்கத்தால் அனுப்பப்பட்ட பொருட்கள்—18,625 இருத்தல்.

வெள்ளக் கஷ்டம் பற்றிய விவரங்களை அறிவதற்காக யாழ்ப்பாணக் கச்சேரியில் ஓர் மகாநாடு கூட்டப்பட்டது. பிரதமர் திரு. பண்டாரநாயக்கா, மந்திரிகள் திரு. மைத்திரிபால சேனநாயக்கா, திரு. இலங்கரத்ன, திரு. ஸி. பி. டீ சில்வா, பாராளுமன்ற அங்கத்தவர் திரு. ஸி. வன்னியசிங்கம், மாகாண அதிபர் ஸ்ரீ காந்தா ஆதியோரைப் படத்தில் காண்க.






ஜனவரி மாதம் 5 ந் திகதியன்று பிரதம மந்திரியை மட்டக்களப்புக்குக் கொண்டு சென்ற ஹெலிகொப்டர் விமானத்தை மக்கள் கூட்டம் சுற்றி வளைந்து அதன் வடிவத்தைக் கண்டு வியந்தது.

# இலங்கை மக்கள் ஒன்றுபட்டதில் மகிழ்ச்சி

"வெள்ளம் இலங்கை மக்களுக்கு அதிக கஷ்டத்தைக் கொண்டு வந்தது. எனினும் அவர்கள் ஐக்கியப்படவும் உதவியிருப்பது மகிழ்ச்சிக்குரியது"

சனப்பிரதிநிதிகள் சபையில் வெள்ள அகதிகளுக்குத் தேவையான நிவாரணம், போக்குவரவுத் தொடர்புகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுகையில் பிரதம மந்திரி திரு. பண்டாரநாயக்கா கூறியதாவது :

வெள்ள நிலைமையை சமாளிக்க டிசம்பர் 26 ம் தேதி அரசாங்கம் ஒரு விசேஷ கமிட்டியை நியமித்தது. துரிதமாக வேலை செய்த இக்கமிட்டியை இச்சந்தர்ப்பத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் அதிகமாகையால் பெரும்பாலோர் அகதிகளாகிவிட்டனர். சிலர் அவர்கள் உடுத்திருந்த உடைகளைத் தவிரமற்ற எல்லாவற்றையுமே இழந்து விட்டனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நான் சென்றபொழுது அப்பகுதிகளிலுள்ள மக்கள் நிவாரண சேவைகளைப் பெரிதும் பாராட்டினர். வெள்ள நிவாரணவேலைகளில் முழுமூச்சுடன் ஈடுபட்ட அரசாங்க அதிகாரிகளையும், மற்ற தாபனங்களையும்

(30 ம் பக்கம் பார்க்க)

# வெள்ள நிவாரணத்துக்கு உதவியவர்களுக்குப் பிரதமரின் நன்றி

வெள்ள நிவாரண வேலைகளில் பங்குபற்றிய இந்திய விமானப் படை, இந்தியப் படை, றேயல் விமானப்படை, றேயல் கடற்படை, ஐக்கிய அமெரிக்கக் கடற்படை என்பவற்றைச் சேர்ந்த பட்டாளப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் பெரிய வெள்ளித் தாம்பாளங்களை ஞாபகச் சின்னங்களாகப் பரிசளித்தார்.

இந்திய விமானப் படையின் சார்பாக விமானக் கமாண்டர் அன்ட்ரூஸ் அவர்களும், இந்தியப் படையின் சார்பாக லெப்டினன்ட் கேர்ணல் சோமணு அவர்களும் இந்த ஞாபகச் சின்னங்களைப் பெற்றனர். றேயல் விமானப்படையின் சார்பாக விமானக் கமாண்டர் கிறீன் அவர்களுக்கும் றேயல் கடற் படையின் சார்பாக கப்டன் சுதெர் அவர்களுக்கும், ஐக்கிய அமெரிக்க கடற்படையின் சார்பில் அட்மிறல் பிறிக்ஸ் அவர்களுக்கும் ஞாபகச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

பிரதம மந்திரி அவர்கள் ஞாபகச்சின்னங்களைப் பரிசளித்துப் பேசுகையில், வெள்ள நிவாரணத்திற்கு உதவியளித்த சகலருக்கும் குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து வந்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமென்றார்.


இலங்கை மக்கள் மேற்கொண்ட விசுவாசமான சிறந்த வேலைகளையும் நன்கு அறிந்திருப்பதாகக் குறிப்பிட்ட பிரதமர், வெளிநாட்டு அரசாங்கங்களைச் சேர்ந்தவர்கள் செய்த சேவைகளை விசேடமாக வர்ணித்தார். எங்கள் உதவிக்கு வந்தவர்களைக் கிரமமாக எடுத்துச் சொல்லி, முதலாவதாக இந்தியா அளித்த உதவியை நன்கு பாராட்டினார். இந்திய விமானப்படையின் விமானக் கொமாண்டர் அன்ட்ரூஸ் அவர்களும், இந்தியப் படையின் லெப்டினன்ட் கேர்ணல் சோமணு அவர்களும் அவர்களின் சிப்பந்திகளும் அளித்த சேவையைத் தனித்தனியே விவரித்த பிரதம மந்திரி, அவர்களது உதவிக்காக இந்நாட்டு மக்களின் சார்பில் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

அடுத்தபடியாக ஐக்கிய இராச்சிய நிவாரணப் படைகளை யிட்டுப் பேசிய போது றேயல் கடற்படையும், றேயல் விமானப்படையும் அளித்த உதவியைப் பாராட்டிய பிரதமர் ஒரு ஆபத்தான வேளையில் அவர்கள் அளித்த உதவிக்காகத் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டுக்குரிய "பிறின்ஸ்ரன்" என்னும் விமானம் தாங்கிக் கப்பலையும், இரண்டு நாசகாரிக் கப்பல்களையுஞ் சேர்ந்த கடற்படைப் பிரிவுக்கும் பிரதமர் தனது நன்றியைத் தெரித்தார். இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானீகர், விமானந் தாங்கிக் கப்பல் வழியில் வந்து கொண்டிருக்கிறதென்று சொல்லிக் கொண்டு அதிகாலை 3 மணிக்குத் தன்னை வந்து எழுப்பியதையும் பிரதமர் மகிழ்ச்சியுடன் ஞாபகப்படுத்தினர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயஞ் செய்து தான் நேரிற் கண்டவற்றையிட்டுப் பேசுகையில், அப்பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்களைக் கொண்டு செல்ல "ஹெலி கொப்டர்" விமானங்கள் மேற்கொண்ட அரிய சேவையைப் பிரதமர் வியந்ததோடு, "ஹெலி கொப்டர்" விமானிகளுக்கும், விமானந்தாங்கிக் கப்பல், நாசகாரிக் கப்பல் ஆதியவற்றிலுள்ள இதர சேவையாளர் எல்லோருக்கும் தமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்தார். அடுத்து, வெள்ள

ஜனவரி மாதம் 4 ம், 5 ந் திகதிகளில் பிரதமர் அமெரிக்க ஹெலி கொப்டரில் சென்று வெள்ளப் பிரதேசங்களைப் பார்வையிட்டார்.



அகதிகளின் புனருத்தாரணத்துக்காகப் பொருள் உதவியளித்த எல்லா நாடுகளுக்கும், அனுதாபச் செய்தியை அனுப்பிய எல்லா நாடுகளுக்கும் பிரதமர் நன்றி கூறினார்.

முடிவில், தான் அளித்த ஞாபகச் சின்னங்களை அவற்றின் உண்மையான பெறுமதியைக்கொண்டு கணிக்காமல், அவற்றை நன்றியறிதலுள்ள மக்களின் ஞாபகச் சின்னங்களாகக் கணிக்கவேண்டுமெனப் பிரதமர் வேண்டிக்கொண்டார்.

கொழும்பு, கடற்படைத் தலைமைக் காரியாலய விருந்துபசார மண்டபத்தில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் மகாதேசாதிபதியும், மந்திரிகளும் இலங்கையிலுள்ள இராஜீயத்தூதராலயங்களின் தலைவர்களும், நிரந்தரக்காரியதரிசிகளும், வெள்ள நிவாரண வேலையுடன் சம்பந்தப்பட்ட அரசாங்கப்பகுதிகளின் தலைமை அதிகாரிகளும் சமுகமாயிருந்தார்கள்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிவதற்காக இங்கு வந்து மகத்தான சேவை செய்த அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர்களும், விமானங்களும், இந்திய விமானப் படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர்களும், விமானங்களும் ஆகாயத்தில் மரியாதை அணிவகுப்பாகப் பறந்து இலங்கைக்குத் தமது பிரியாவிடை வணக்கத்தைச் செலுத்தின. அமெரிக்கப் படை ஜனவரி மாதம் 7 ந் திகதியும், இந்தியப் படை 8 ந் திகதியும் மரியாதை அணிவகுப்பு நடத்தின.

அமெரிக்க விமானங்களும், ஹெலிகொப்டர்களும் திருக்கோணமலைக்கு வந்த அமெரிக்க "பிரின்ஸ்டன்" விமானந் தாங்கிக் கப்பலைச் சேர்ந்தவை. இவை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குத் தேவையான உணவு, மருந்துப் பொருட்களை விமானத்திற் கொண்டு சென்று வெள்ள அகதிகளுக்கு வழங்கின.

விமானந் தாங்கிக் கப்பல் கொழும்புக்குச் சில மைல்களுக் கப்பால் வரும் பொழுதே இலங்கைப் பிரதமர் ஹெலிகொப்டர் விமானமூலம் கப்பலுக்குச் சென்று கொழும்பில் காலிமுகத்திடலிலுள்ள கடற்

(31 ம் பக்கம் பார்க்க)

**வெள்ளக் கொடுமையின்போது உதவிய அமெரிக்க விமானங்கள் இலங்கையை விட்டுப் புறப்படுமுன் ஆகாயத்தில் அணிவகுத்துப் பறந்து பிரியாவிடை செலுத்தின. நம் பிரதமர் அவ்விமானிகளைப் பாராட்டி நன்றி கூறத் தவறவில்லை.**



# ஈழத்தில் நாடகம்

(கலை அரசு கே. சொர்ணலிங்கம்)

கலைகள் அறுபத்துநான்கு என்று கூறப்படுகின்றது. அவற்றுள் சங்கீதம், நாட்டியம், நாடகம், சித்திரம், சிற்பம், காவியம், ஓவியம், இலக்கியம், முதலியவை நுண்கலைகளெனப் போற்றப்பட்டு வருகின்றன. இவைகளுள் மிகச்சிறந்த கலை சங்கீதமென்று, சங்கீத வித்வான்களும், நாட்டிய மென்று நாட்டிய கலைஞர்களும், கூறுவதுபோன்று ஒவ்வொருவரும் தாம் தாம் கைக்கொள்ளும் கலையே சிறந்ததெனக்கூறுவர். என்னைப் பொறுத்தவரையில் நாடகக்கலையே மிகச் சிறந்ததென அபிப்பிராயம் கூறுவேன். என்னை நாடகப் பித்தனென என் நண்பர்கள் பட்டங்கட்டுவார்கள். அந்தப் பித்தின் காரணத்தால் நான் இவ்வாறு கூறவில்லை. நாடகத்தில் முன்னேறிச் சிறந்த நடிகனாக விளங்க விரும்பும் ஒருவன், ஓரளவிற்கேனும் இலக்கியம், சங்கீதம், நாட்டியம், சிற்பம், ஓவியம் முதலியகலைகளில் பயிற்சி பெறவேண்டும். நாடகக் கலையின் மூலம் ஒருவனுக்கு மற்றும் கலைகளிலும் ஞானம் ஏற்படத்தான் செய்யும். அன்றியும் பொது மக்கள் கற்றவராயினும், கல்லாதவராயினும் சிறுபிள்ளைகள் முதிர்ந்தோர் யாவராயினும், சமயாசாரங்களையோ, கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றையோ நாடகத்தின் மூலம் மிக எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

நாடகக்கலை எல்லாத்தேசங்களிலும் ஆதி காலந் தொட்டு இருந்து வருகின்றது. தமிழர்களுக்குள் நாடகம் அநேக நூற்றாண்டுகளாக மக்கள் வாழ்க்கையில் ஓர் அம்சமாக விளங்கி வந்திருக்கின்றது. ஆயினும் சென்ற அறுபது, எழுபது வருடங்களுக்குள் பெரும் மாற்றங்களை அடைந்துவிட்டது.

ஆதியிலே நாடகங்கள், சமய போதனைக்காக, அநேகமாக ஆலயங்களில் உற்சவ வேளைகளில் நடாத்தப் பட்டு வந்தன. ஒளவையார் திரைப் படத்தை பார்த்தவர்களுக்கு ஓர் உற்சவ வேளையில் நாடகக் காட்சிகள் காட்டப்பட்டது ஞாபகமிருக்கும். அதிலிருந்து ஒளவையார் காலத்திலும் அந்த வழக்கம் இருந்திருப்பதை அறிகின்றோம். ஆனால் அந்தக் காலத்திலும் திரை அலங்கரிப்புகளுடன்கூடிய அரங்கமேடை இருந்திருக்குமோ வென்பதுதான் சந்தேகம்.

முற்காலங்களில் நமது தேசத்தில் நாடகம், விலாசம் என்று இருவித முறைகளில் நாட்டுக்கூத்துகள் நடைபெற்று வந்தன. நாடகத்திற்கும், விலாசத்திற்கும் வெவ்வேறு விதிமுறைகள் உண்டு. நாடகத்தில் ஆட்டம் ஏறக்குறைய பரதநாட்டியத்தை ஒட்டியது, அதிகமாகவிருக்கும். விலாசத்தில் ஆட்டம் மட்டமாகவேயிருக்கும். பாடல்களும் அதற்கு ஏற்றனவாகவே அமைக்கப்பட்டிருக்கும். மேடை அமைப்புத்தானும் வித்தியாசமானவை. விலாச மேடை தரையை விட உயரமாகவும் வட்ட வடிவமாகவும் இருக்கும். பக்க மேளகாரர் நடுவில் நிற்க நடிகர்கள் மேடையைச் சுற்றி ஆடுவார்கள். ஆனால் நாடகங்களுக்கு சதுரமாக மேடையமைத்து பின்புறமாகவே பக்கமேளகாரர் அமர்ந்திருப்பார்கள். இந்த நாட்டுக் கூத்துகள் தக்கபடி ஓர் அண்ணாவியினால் பயிற்றப்பட்டு நடிகர்களுக்கும் போதிய அனுபவம் ஏற்பட்ட பின்னர்தான் அரங்கத்தில் நடித்துக் காட்டுவார்கள். இந்த நாட்டுக் கூத்துகளைப் பற்றிச் சொல்லும் போது சில விசித்திரமான விஷயங்களையும் சொல்லத்தான் வேண்டும். அநேகமாக நடிகர்களெல்லாம் வேஷங்கட்டிக்கொண்டு இரவு எழு மணிக்கு நாடகம் ஆடத் தொடங்கி விடுவார்கள். இரவு முழுவதும் மேடை மீது ஆடிவிட்டு மறுநாள் வீடு வீடாகச் சென்று ஆடுவார்கள். மறு நாள் இரவு பத்து மணிவரையில் வேஷங்களையாது ஆடியவர்களையும் நேராகப் பார்த்திருக்கிறேன். நம்மவர்களுள் பலர் அரைமணி நேரம் தொடர்ந்து நடித்தவுடன் களைத்து விட்டதாக முறையிடுவார்கள். அது இந்தக்காலம். அந்தக் காலத்தில் "காஸ்" மின்சாரம் முலிதய விளக்குகள் கிடையா. நான்கு மூலைகளிலும் வாழைக்குத்திகளை நட்டு அதன்மேல், தேங்காய்ப் பாதிகளில் எண்ணைவிட்டு துணிவைத்துக் கொளுத்தி விடுவார்கள். இந்தச் சிறு வெளிச்சத்தில் நாடகத்தை ஆயிரக் கணக்கானோர் உட்கார்ந்திருந்து பார்த்து ரசிப்பார்கள். அவர்களுடைய கண்கள் எவ்வளவு கூர்மையாக இருந்திருக்க வேண்டும்.

தற்காலத்தில் இந்தியாவிலிருந்து நாடகக் கோஷ்டிகள் நமது நாட்டிற்கு வந்து போவதுபோல, தஞ்சாவூரிலிருந்து வருடா வருடம் சில நாட்டுக் கூத்துக் கோஷ்டிகள் வந்து பலவிடங்களிலும் ஆடுவார்கள். இவர்களுள் இராஜகோவிந்தன் கோஷ்டி மிகப் பெயர் பெற்றது. அவர் குடும்பத்தினர் யாவரும் சிறந்த நடிகர்கள். அந்தக்காலத்தில் இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்திற்கு மிடையில் பிரயாணஞ் செய்யக் கட்டணம் 25 சதம் தான்.

அன்றியும் இப்போது போல் இரு தேசங்களுக்கு மிடையில் போய்வர எவ்வித தடைகளும் இருந்த தில்லை. மேற்படி கோஷ்டிகளைப் பார்த்து நமது பல கிராமங்களிலும் கூத்து ஆடி வந்தார்கள். இவை களில் நெல்லியடி, வட்டுக்கோட்டை, இணுவில், அழ வெட்டி, மானிப்பாய் முதலிய கிராமங்கள் முன்ன ணியில் நின்றன. அழவெட்டியாரின் கண்டி நாடக மும், மானிப்பாயாரின் தமயந்தி விலாசமும் மிகப் புகழ்பெற்று விளங்கியவை. இத்தகைய நாடகங் கள் மிக அருமையாய் விட்டன. இந்த நாடகங் களின் பாடல்கள் சிலவற்றைக் கேட்டிருக்கிறேன். அத்தகைய அருமைவாய்ந்த கவிகளை இயற்றவல்ல வர்கள் இப்பொழுது கிடைப்பார்களோ வென்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

நான் முன் கூறியதுபோல் ஏறக்குறைய எழுபது வருடங்களுக்கு முன்னிருந்து நாடகத்தில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. முதல் முதலாக திரை அலங்காரங்களுடன் கூடிய மேடை யமைத்து கொழும்பில் நாடகம் நடாத்தியவர் சுந்தரராவ் என்று கூறக் கேட்டிருக்கிறேன். அந்தக் கோஷ்டியில் சேர்ந்தவர்கள் யாவரும் தமிழறிவு, சங்கீத ஞானம், நடிப்புக் கலை இவைகளில் சிறந்த வர்கள் என்று சொல்லுவார்கள். அதன்பின் நாராயணசாமிப்பிள்ளையின் சென்னை இந்து வினோத சபையார்கள் மிகப் பெரும் புகழை யீட்டியிருக்கிறார் கள். திரு. நாராயணசாமிப்பிள்ளையின் நாடகங்க ளில் ஒன்றுதான், (1906 ம் ஆண்டில்) எனக்குப் பார்க்கக் கிட்டியது. அந்த நாடகம் இன்னும் என் மனதில் பதிந்திருக்கிறது. நடாகத்திற்குரிய எல்லா இலக்கணங்களும் அந்த நாடகத்தில் பொருந்தி யிருந்தன.

யாழ்ப்பாணத்தில் 1896 இல் வண்ணார்பண்ணை மணியகாரன் தில்லை நாதரின் வளவில் (பிற்காலத் தில் பெரியதுரை ராஜா வசித்தவிடம்) ஓர் கோஷ்டி யார் வந்து இரண்டொரு மாதம் நாடகங்கள் நடத்தி னார்கள். அடுத்த வருடமும் அதேயிடத்தில் இன் னொரு கோஷ்டியார் நடித்தார்கள். மேற்படி நாடகங்கள் அவ்வளவு நன்றாக இருக்கவில்லை. 1900 த்தில் புத்துவாட்டியார் வளவில் (இப்போது மனோகரா படமாளிகையிருக்கும் இடம்) சிறப்பாகத் தொடர்ந்து சில மாதங்களாக நாடகங்கள் நடை பெற்றன. ஆரம்பத்தில் வி. என். சாமிநாத முதலியார், ஜகநாத ஆழ்வார் அவர்களை வைத்து நடாத்தினார்கள். அதன் பின் வி. எஸ். முனி சாமி நாயுடு, வி. எஸ். நடேச பத்தர், அப்பண்ண ராவ் கெஞ்சின் ரங்கசாமி நாயுடு முதலியவர்களை வரவழைத்தார்கள். இவர்களுக்கு ஆசிரியராக சுவாமி சங்கர தாஸ் அவர்கள் வந்திருந்தார். இத்தகைய, புகழ் படைத்த தென் இந்திய நடிகர் பலர் கூடியிருக்கும் கோஷ்டியின் நாடகங்கள் உன்னதமாயிருந்தனவென்று சொல்ல வேண்டிய தில்லை. அடுத்த வருடமும் சாமிநாத முதலியார், ஜகநாத ஆழ்வார், நடேசபத்தர், கோபாலராவ், ஸ்ரீனிவாச ஆழ்வார், மதார் சாகிப் முதலியோர் அடங்கிய கோஷ்டி வந்து முன் போல சில மாதங்களாகச் சிறப்பாக நடித்தார்கள். இதை யெல்லாம் பார்த்துவிட்டு நாம் பேசாதிருப்போமா! நாமும் நாடகமாட முயன்று விட்டோம். அரிச்சந் திரா மயான காண்டமே நாம் எடுத்துக்கொண்ட நாடகம். அந்த நாட்களில் நமது கிராமத்தில் ஒத்துழைப்புப் போதிய அளவு இருந்தமையால் சொந்தக் கொட்டகை கட்டி, சொந்தமாகவே திரை கள், உடுப்புகள் தயாரித்து, 1901 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதி யன்று பகிரங்கமாக ஆடினோம். இதுவே இலங்கையில் முதன்முதலாக "டிராமா" முறையில் சுதேசிகளால் நடிக்கப்பட்ட நாடகம் என்று எண்ணுகிறேன். நானும் இதில் தேவதாசனாக நடித்தேன். இதுவே நான் முதல் முதலாக மேடையேறியது. நான்கு முறை அந் நாடகம் பெரும் திரளான ஜனங்கள் முன்னிலையில் நடிக்கப்பட்டது. ஆனால் எமது பள்ளிக்கூடப் படிப் பைக் கெடுத்து விடுமென்று "மானை இந்து வினோத சபை" யைக் கலைத்துவிட்டார்கள்.

கொக்குவிலில் பலர் கூடி ஓர் கோஷ்டியை ஏற் படுத்தி பல நாடகங்களைப் பயிற்றுவித்து தொடர்ந்து தொழில் முறையில் நடத்தி வந்தார்கள். சின்ன மோனை என்னும் கனகசபை, ஆனைப்பந்தி நமசிவாயம், இணுவில் சுப்பர், கோண்டாவில் சர வணமுத்து முதலியோர்கள் நல்ல மதிப்புடன் பல வருடங்களாக நாடகத் தொழிலில் ஈடுபட்டிருந்தார் கள். மேற் கூறிய நமசிவாயத்திற்கு நாராயண சாமிப்பிள்ளையுடன் சந்திரமதியாக நடித்த பெருமை யுண்டு.

1910 ம் ஆண்டு தொடக்கம் நான் கொழும்பில் வசித்து வந்தமையால் அங்கே நடந்த நாடகங்களில் தான் எனக்கு அனுபவம் உண்டு. ஆலந்தூர் நாடகக் கம்பனி போன்ற கோஷ்டிகள், பாலநடிகர்க ளைக் கொண்ட சில கோஷ்டிகளைத் தவிர மற்றெல் லாம் ஒற்றிகையில்லாமலும், நாடகக் கலையில் சிரத் தையில்லாமலும் நடித்து வந்தார்கள். பொது வாக ஒருவர் சிறிது பாடவல்லவரானால் அவர் நடிப்புத் தொழிலில் ஈடுபட்டு விடுவார். குணசித் திர நடிப்பில் அக்கறை எடுப்பதில்லை. இதனால் நமது நாடகங்கள் சீர் கேடான நிலையில் இருந்தன.

ஆனால் பொறுக்கி யெடுத்த சிலர் நடிப்பில் சிறிது கவனம் செலுத்தினார்கள்.

அந்தக் காலத்தில் மதிப்புடன் விளங்கிய நடிக நடிகைகளுள் எம். ஆர். கோவிந்தசாமி, எஸ். ஜி. கிட்டப்பா, எஸ். ஆர். கமலம், கெ. எஸ். ஆனந்த நாராயண ஐயர், ரி. பீ. இராஜலட்சுமி, கமலவேணி, கே. பி. சுந்தராம்பாள் போன்றவர்களைக் குறிப்பிடலாம். 1928 ல் ரி. கே. எஸ். சகோதரர் கோஷ்டியார் நன்றாகப் பழக்கப்பட்டமுறையில் நாடகங்கள் பலவற்றை நடாத்திச் சென்றார்கள். அப்பொழுது ஸ்ரீசண்முகம், பகவதி அவர்கள் மிகச்சிறு பாலராக நடித்தது இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது.

இலங்கையில் நாடகத்திற்கு ஓர் புதிய சகாப்தம் 1911 ல் தான் ஏற்பட்டது. அந்த வருடத்தில் தான் நமது குரு, நாடகத் தந்தை, ராவ் பகதூர் சம்பந்த முதலியார் அவர்கள் “சுகுண விலாச சபா” வுடன் வந்து நாடக மென்றால் என்ன, நடிப்பென்றால் எப்படி என்பதை நமக்குக் காட்டிச் சென்றார். மறுபடியும் 1913 லும், 1916 லும் வந்து பல நாடகங்களை நடாத்தினார்கள். அதன் பலனாக 1913ல் “இலங்கா விலாச சபாவை” கொழும்பில் ஸ்தாபித்து அனேக சுபோத வருடங்களாக நாடகங்களை நடாத்தி வந்தோம். தற்காலத்தைப் போல் அவசர அவசரமாக அரைகுறையான பயிற்சியுடன் நடிக்க முன்வரவில்லை. ஒவ்வொரு நாடகத்திற்கும் அதற்கேற்றவாறு பலதுறைகளிலும் ஆராய்ச்சி செய்து போதியளவிற்கு ஒற்றிகைசெய்து நடாத்தி வந்தமையால் நமது சபாவிற்கு அமோகமான ஆதரவு கிடைத்தது. இப்பொழுது போல் வீடுவீடாகச் சென்று பிரவேசத் துண்டுகளை விற்கும் வழக்கம் நமக்கு இருக்கவில்லை. நமது நாடகங்களை தமிழ்ச் சகோதரர்கள் மாத்திரமல்லாமல் ஐரோப்பியர், பறங்கியர், சிங்களவர், முஸ்லீம்கள், இந்தியர் முதலானோரும் ஏராளமாக வந்து ஆவலுடன் பார்த்துச் சென்றார்கள் என்றால் நமது நாடகக்கலைக்கு மதிப்பிருந்துதான் இருக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்திலும் “சரஸ்வதி விலாச சபா” ஸ்தாபிக்கப்பட்டது. பிற்காலத்தில் கொழும்பில் “வித்தியாவினோத சபா” “வெள்ளவத்தைநாடக சபா” போன்றவை ஓரளவிற்கு நல்ல நாடகங்களை நடத்திவந்தன. மேற்கூறியனவெல்லாம் வித்தியாதூர ( ) நடிகர்களைக் கொண்ட சபாக்களாகும். இவைகளில் தோன்றிப் புகழ்பெற்ற நடிகர் பலர். அவர்களுள் பின் கூறப்படுபவர்களை ஒருவரும் மறக்கமாட்டார்கள். எம். இராஜேந்திரம், ஜே. ஜி. இராஜா. கே. சரவணமுத்து, எம். எஸ். திருவிளங்கம், எஸ். மனுநாயகம், வி. சின்னத்துரை, எஸ். வி. சுப்பிரமணியம், வி. சபாபதி, யாழ்ப்பாணத்து வி. இராமனுதன், வி. எம். கிருஷ்ணசாமி, எஸ். நவரத்தினம் முதலியோர்.

1930 ம் ஆண்டிற்குப் பின் நாடகத்தின் தரம் வரவரக் குன்றிப்போய் விட்டது. இதற்குக்காரணம், திரைப்படங்களின் வருகையென்று பொதுவாகச் சொல்லுவார்கள். திரைப்படங்களில் ஆபாசமான உடைகளைப் பெண்களுக்கு உடுத்துவதிலும், அனுவசியமான பாடல்கள், குத்துச் சண்டைகள், மிதமிஞ்சிய நடனங்கள் ஆகியவற்றைப் புகுத்துவதிலும் கவனம்செலுத்துகிறார்களென்பதுஉண்மை.படமுதலாளிகள் பணத்திலேயே அக்கறையாய் இருப்பார்கள். ஆதலால் எப்படியோ பொது ஜனங்களின் மனதைக் கவரச் செய்யத் தங்களால் இயன்ற வழிவகைகளை அவர்கள் தேடுவது சாதாரணம். ஆனால் “சினிமா” வினால் நாடகம் பல பலன்களையும் அடைந்துதான் விட்டது. இப்போது தாய் நாட்டிலிருந்து வரும் கோஷ்டிகளைப் பார்த்தால் வேஷத்தரிப்பு, உடை, மேடையமைப்பு, ஒளியமைப்பு முதலிய பல துறைகளிலும் பெரும் முன்னேற்றங்களை யடைந்து விட்டார்களென்றே சொல்ல வேண்டும். முன்போல், மேடையில் தோன்றும் போது, ஏதாவது பாடலைப்பாடித் துள்ளிப் பாய்ந்து வருவதில்லை. அல்லாமலும் காட்சிகளுக்கிடையில் பக்கமேளக்காரர் கச்சேரிகள் செய்து காலத்தைப் போக்குவதும் இல்லை. “பபூன்” என்றொருவர் நின்று அனுவசியமாகப் பேசிச் சேஷ்டைகள் செய்வதும் இல்லை.

ஆனால் நமது ஊரிலே நாடகத்தின் தரம் வர வர மிகக் குன்றியே வந்து விட்டது. இதற்குக் காரணங்கள் பல. (1) இங்கே யாரும் நாடகம் நடிப்பதென்றால் ஏதாவது ஒரு நிதிக்காகவேயன்றி கலை விருத்திக்காகச் செய்வது அரிது. நிதி திரட்டுவதற்காகவென்று வீடு வீடாகச் சென்று பிரவேசத் துண்டுகளின் விற்பனைக்கும் குறை விருக்காது. ஆனால் நாடகம் அவசர அவசரமாகவும் அரை குறையாகவும் நடப்பதும் சாதாரணம். சில சமயங்களில் பிரவேசத்துண்டுகள் விற்பனையான பின்னரே நாடகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முயல்வதையும் யான் அறிவேன். நாடகம் இத்தகைய ஓர் அற்ப விஷயமாகிவிட்டது. இப்படி நாடகங்களைக் கேவலப்படுத்துவது முட்டாள்தனம். இப்படிப்பட்ட முட்டாள்களினால் நாடகக்கலை கொலை செய்யப்படுவது மன்றி நமது நாட்டிற்கு “கலைப்பாலை வனம்” என்ற பட்டப் பெயரும் வந்து விடுகின்றது. இப்படியான நாடகங்களைப் பார்த்தவர்களுக்கு மறுபடியும் நாடகம் பார்க்க விருப்பமுண்டாகுமா? (2) இப்போ

அனேக பெண் பாடசாலைகளில் நிதி திரட்டுவதற்காக நாடகங்களை நடாத்துகிறார்கள். அவர்களெல்லாம் நடிப்பிலும் பார்க்க உயர்தர உடைகளை உடுப்பதிலும் நடனங்களை அதிகமாகப் புகுத்துவதிலுமே கூடிய கவனத்தைச் செலுத்துகிறார்கள். முக்கியமான காரணம் என்னவெனில் நடனத்திற்கென முப்பது நாற்பது பிள்ளைகளைத் தெரிந்தெடுத்துக் கொண்டால் ஒவ்வொரு பிள்ளையின் பெற்றோர் மூலமாக நிதி பெருகும் என்பதே. பிள்ளைகளின் நடனங்கள் பார்க்க நன்றாக இருந்த போதிலும் நாடகம் என்றால் அது நாடகமாகவே யிருக்க வேண்டும். நடனமாக இருக்கக்கூடாது. (3) தற்காலத்தில் சமூக நாடகங்கள் நமது நாட்டில் மலிந்து விட்டன. சமூக நாடகங்கள் நல்லவைதான். ஆனால் அவை போதிய அறிவுடையவரால் இயற்றப்படவேண்டும். நாடக இலக்கணங்களை ஆராய்ந்து ஆலோசித்து அமைக்கப்படவேண்டும். ஷேக்ஸ்பியர், மில்ரன் முதலியவர்களியற்றிய நாடகங்களினாலேயே ஆங்கில பாஷை உயர் நிலையடைந்ததெனக் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் நமது நாட்டிலே நடக்கும் சில நாடகங்களில் உபயோகிக்கும் பாஷை அருவருக்கத்தக்க கேவலமான கீழ்த் தமிழாயிருப்பதைப் பார்க்க வருத்தமுண்டாகிறது. இதனால் நமது பாஷை எவ்வளவு இழிவு படுகிறதென்பதை அந்த ஆசிரியர்கள் யோசிப்பதில்லைப் போலும், அவர்களேன் யோசிப்பார்கள்? சமூக நாடகங்களில் சாதாரணமாய் உபயோகத்தில் இருக்கும் பாஷையை உபயோகிக்க வேண்டுமென்பது உண்மை. ஆனால் நாடகத்தில் உபயோகிக்கும் போது அதற்கும் நாடக பாணியில் ஓர் மெருகு கொடுக்கப்படவேண்டும். கலையின் நோக்கம் அழகுபடுத்துவதே, இழிவு படுத்துவதல்ல. (4) அனேகமாக நிதி திரட்ட முயல்வோர் நாடகத்திற்கு யாராவது ஒரு உயர்தர உத்தியோகத்தர் சமூகங்கொடுக்க ஏற்பாடு செய்துவிடுவார்கள். அல்லாவிட்டல் பிரவேசத்துண்டுகள் விற்பதெப்படி? இந்த உத்தியோகத்தருக்கு நாடக அறிவோ அனுபவமோ சுத்த சூன்யமாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் ஏற்கனவே கற்பனை செய்த புகழுரைகளைக் கட்டியளக்கத் தவறமாட்டார். தம்மை வரவழைத்தவருக்கு கைமாறு செய்வது, அவரை கண்டபடி புகழ வேண்டுமென்பது என்று எண்ணிக் கொள்ளுகிறார்கள் போலும். கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு இதெல்லாம் எவ்வளவு கசப்பாயிருக்குமென்று எண்ணுவதில்லை. தகுதியில்லாதவர்களைப் புகழ்வதினால் அவர்களை இன்னும் தகுதியற்றவர்களாக்குவதாகும்.

நமது நாட்டில் நாடகக் கலையில் பிரகாசிக்கக் கூடிய வல்லமை பொருந்திய இளைஞர்கள் ஆண் பெண்கள் பலரை நான் அறிவேன். இவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டிப் போதியளவிற்குப் பயிற்சியளித்தால் எந்த ஊருக்குச் சென்றாலும் அங்கே நற்கியாதி பெறுவார்களென்பது என் நம்பிக்கை. சென்ற வருடத்தில் "பரியோவான்" கல்லூரியில் ஆண்பெண்களடங்கிய குழுவினால் ஓர் நாடகம் நடாத்தப்பட்டது. அமோகமான ஆதரவைப் பெற்றார்கள். அதுபோல் இன்னும் நாடகங்களை ஏன் நடத்த முடியாது? சுயநலம் கருதாத, கலையிலேயே ஆர்வமும் அபிமானமும் கொண்ட பெரியார்கள் முன்வந்தால் மறுபடியும் நாடகக்கலையை முன்னேறச் செய்யலாம்.

---

# அரசியல் திட்டத்தைத் திருத்தல்

பிரதம மந்திரி அவர்கள் சமர்ப்பித்த ஒரு பிரேரணையின் பேரில், இலங்கையின் அரசியல் திட்டத்தைத் திருத்துவது பற்றிப் பரிசீலனைசெய்ய இரு சபைகளினதும் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு கூட்டுத் தெரிவுக் கமிட்டியில் சனப் பிரதிநிதிகள் சபையைச் சேர்ந்த பின்வரும் அங்கத்தவர்கள் நியமனஞ் செய்யப்படுவதைச் சனப்பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியது:—

பிரதம மந்திரி, திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா; நிதி மந்திரி, திரு. ஸ்டான்லி டி. சொய்ஸா; விவசாய, உணவு மந்திரி, திரு. டி. பீ. ஆர். குணவர்த்தன; தொழில், வீடமைப்பு, சமூகசேவா மந்திரி, திரு. ரீ. பி. இலங்கரத்தின; திரு. எம். டி. பண்டா; திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கியூ. ஸி.; டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா; கேட் முதலியார், எம். எஸ். காரியப்பர்; திரு. பீ. ஜி. பி. கெனமன்; எதிர்க் கட்சித் தலைவர், டாக்டர் என். எம். பெரேரா; திரு. ஆர். எஸ். வி பௌலியர், ஸி. பி. ஈ.

பின்வரும் விஷயங்களில் அரசியற் திட்டத்தைத் திருத்தும் பொருட்டு சனப்பிரதி நிதிகள் சபையைச் சேர்ந்த இப் பதினொரு அங்கத்தவர்களும் செனட் சபை அங்கத்தவர்களுடன் கூடி வேலை செய்வார்கள்:—

1. இலங்கையை ஒரு குடியரசாகப் பிரகடனஞ் செய்தல், (2) அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளித்தல் (3) செனட் சபையினதும் சனப்பிரதி

(18 ம் பக்கம் பார்க்க)

எங்கள் ஊர்

# ஆனையிறவு

சி. வி. சின்னத்தம்பி

தமிழகத்தின் தொன்மை—அதன் பெருமை—சிறப்பு—பண்பு, இன்னும் எத்தனையோ இலட்சியங்களை நாம் கண்டும், கேட்டும் இருக்கிறோம். எத்தனையோ ஆயிரம் வருடங்களாக நம் நாட்டுத் தாய்க் குலம் ஏன்? சகோதரிகள் பதிவிரதாதர்மத்திலே மேம்பட்டிருந்தார்கள் என்பது சரித்திரம் கூறும் சான்று. இவை யனைத்தும் எமது தாய் நாடாகிய இந்தியாவிலே தான் நடைபெற்றனவென்பது இலக்கிய கர்த்தாக்களின் நம்பிக்கை. சேய் நாடாகிய இலங்கையிலும் இலக்கியங்களில் பொறிக்கப்படாமல் மறைந்து கிடக்கும் மாதர் திலகங்களின் பதிவிரதாதர்மத்தையும், அவர்களின் சிறப்பையும் அறிந்திருப்பது அவசியம்.

நமது ஈழத்தீவில் செந்தமிழ் வளரும் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் மற்றப்பகுதிகளையும் இணைக்குமிடமாகவிருப்பது ஆனை இறவுக்கடலேரி. இப்பெயர் வந்த வரலாறே மிகவும் பிரசித்தமானது. "ஆனையிறவு" என்றதும் ஏதோ ஒரு காலத்தில் அங்கே யானை ஒன்று இறந்து விட்டபடியால் அப்பெயர் வந்திருக்கலாமென்பது சிலரின் கருத்து. ஆனால் இலங்கையில் யானைகள் இறந்த இடங்கள் ஏராளம். அதிலும் உறுகுணைப் பகுதியில் ஏராளமான யானைகள் இறந்திருக்கின்றன அவ்விடங்களில் இப்பெயரைத் தாங்கிநிற்குமிடங்களில்லையே!

இலங்கையில் அரசியல் கொந்தளிப்பின் நடுவே சிறப்பான செங்கோல் செலுத்திய தமிழரசர்கள் இருந்த நேரம் அரசியல் அதிகாரங்கள், சட்டதிட்டங்களெல்லாம் தீந்தமிழிலே நடைபெற்றகாலம். அதே காலத்தில் குறிக்கப்பட்ட கிராமங்களைத் தமது ஆளுகைக்குட்படுத்தியிருந்தனர் "வன்னியர்" என்ற அரசபரம்பரையினர். வன்னியர் ஆட்சிக்காலத்தில் வண்டமிழ் தளைத்தது. வான்பொய்க்கவில்லை. களனிகளெல்லாம் காரிருள் கவிந்த வான் நிலையொக்குமாம். ஆம் முற்று முண்மைதான்.

ஐந்நூறு வருடங்கள் தமது ஆட்சியைத் திறம்பட நடாத்தினர். முடி வெல்லையாகிய காலத்திற்கு கொஞ்சம் முன் "பொத்தநாச்சன்" வன்னிச்சியென்பவள் வன்னியர் பரம்பரையின் ராணியாகப் பிரகடனப் படுத்தப்பட்டாள். அவளது ஆளுகைக்காலத்திலே தான் "உவர் நீர்த்தொட்டியென்ற பெயர் "ஆனையிறவு"க்கடலேரியென்று வழங்கலாயிற்று. இதன் வரலாற்றை ஆராய்வோம்.

விவசாயத்தில் கவனம் செலுத்தினாள் அரசி. குடிமக்களுக்கு எத்தனை உதவிகள் தேவையோ அனைத்தையும் அளிக்கத்தயாராகவிருந்தாள். விவசாயத்தை மக்கள் தமது சீவனும்சமாகக்கருதியிருந்தாலும், அதே காலத்தில் அழிவு மிகவும் ஏராளம். காட்டுயானை, பன்றி இன்னும் பல வன விலங்குகளால் அழிவு ஏற்பட்டு விடும். இவற்றிலிருந்து விளை நிலங்களைக் காப்பாற்ற வேண்டியது குடிகளல்ல—அரசனை அல்லது சிம்மாசனத்தின் அரசியையே சாரும்.

முன்கூறிய பொத்தை நாச்சன் வன்னிச்சியின் அரசோங்கும் நேரத்தில் மதம்பிடித்த காட்டு யானைகளின் தொல்லை விவசாயிகளுக்கு மிகவும் சேதத்தையுண்டு பண்ணிவிட்டன. எனவே அரசி தனது போர்வீரர்களின் துணையால் காட்டுயானைகளைப் பிடிப்பதல்லாமலும் அம்பு, வில்லு, ஈட்டி, கோடரியின் தாக்குதலிற்கும் அவற்றை இரையாக்கினாள்.

மதம்பிடித்தயானை யொன்று எந்த விதமான தாக்குதலையும் பொருட்படுத்தவில்லை. பயிர்களைச் சேதம் செய்யும் நோக்கமே தனது குறிக்கோளாகக் காட்சியளித்தது. ஆகவே அந்த யானையைப் பிடித்தோ அல்லது கொன்றோ தருபவர்களுக்கு ஆயிரம் வராகன் தருவதாகப் பறையறைவித்தாள் அரசி. அதைச் சிரமேற் கொண்டு போனவர்களின் கதி எமலோகம்தான். மீண்டும் திரும்பியவர்கள் கிடையாது.

யானையின் அழிவைப்பற்றி மக்கள் தினம் தினம் முறையிட்டுவந்தார்கள். உடனே வன்னிச்சியரசி மந்திரி பிரதானிகளைக் கூப்பிட்டு ஓர் ஆலோசனை நடத்தினாள். ஒருவரும் பிடிக்கக்கூடியதான நிலையிலில்லை. இத்தனை திட்டங்களையும் முதன் மந்திரியாகிய சொக்க நாதபிள்ளையின் தலையிலே போட்டு விட்டாள் அரசி. அவர் தான் என்செய்வது. இவ்வாறு மந்திரிகள் சபையில் பிரலாபிக்கும் நேரத்தில் மெய்க்காப்பு அதிகாரியான ஒருவர் "சொக்கநாதரல்ல, அவரின் மனைவியாலும் இயலாது அந்த யானையைப்பிடிக்கும் வேலை" என்று ஒரு சொல்லம்பையும் பாய்ச்சி விட்டார்.

மந்திரிசபைக் கூட்டம் முடிந்தது. முதன் மந்திரி தமது இல்லம் போனார். உணவில்லை, உறக்கமில்லை ஒரே சிந்தனைதான். மனைவி கேட்டாள். நடந்ததையே சொல்லிவிட்டார்.

(20 ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

இன்று நமது தாய் நாடாகிய தமிழ் நாட்டிலே, மூவர் பாரத இரத்தினங்கள் ஒரு காலத்தில் ஒருங்கு விளங்குகின்றார்கள். அவ்வாறே சென்ற நூற்றாண்டிலே ஒரு காலத்தில், மூவர் ஈழ இரத்தினங்கள் நமது யாழ்ப்பாணத்திலே ஒருங்கு விளங்கினார்கள்.

இன்றைய பாரத ரத்தினங்கள் தனித்தனி வெவ்வேறு துறையில் மூவரும் பிரகாசிக்கின்றார்கள். அன்றைய ஈழரத்தினங்கள் தமிழ் சைவம் என்கின்ற ஒன்றுபட்ட ஏகதுறையில் மூவரும் ஒருங்கு பிரகாசித்தார்கள்.

ஈழ இரத்தினங்கள் மூவரில், வயசால் மூத்தவர் சுன்னாகம் முத்துக்குமார கவிராஜ சேகரர். அவருடைய காலம் 1780 க்கும் 1851 க்கும் இடைப்பட்ட காலம். 70 வயசு உயிர் வாழ்ந்தவர். இவர் ஈழத்து முதல் இரத்தினம்.

இரண்டாவது இரத்தினம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். இவருடைய காலம் 1822 க்கும் 1879 க்கும் இடைப்பட்ட காலம்.

மூன்றாவது இரத்தினம் ஸ்ரீலஸ்ரீ சிவ சங்கர பண்டிதர். இவருடைய காலம் 1829 க்கும் 1871 க்கும் இடைப்பட்டகாலம்.

இற்றைக்கு நூற்றிருபத்து நான்கு வருடங்களுக்கு முன் 1830 ம் ஆண்டு நமது நாட்டிலே ஒரு புண்ணிய ஆண்டு. அந்த ஆண்டிலே சிவசங்கர பண்டிதருக்கு வயசு ஒன்று பூர்த்தியாகவில்லை. பண்டிதர் உடம்பு புரட்டி, மெல்லத் தவழ்ந்து, தளர் நடை பயில்கின்றார்.

அதே ஆண்டில் ஆறுமுக நாவலருக்கு வயசு ஏழு. திண்ணைப் பள்ளிக்கூடத்திலே வாக்குண்டாம் நல்வழி படிக்கின்றார். அவருடைய கூரிய கண்கள் அங்கும் இங்கும் தூர நோக்குகின்றன.

சுன்னாகம் முத்துக்குமார கவிராஜசேகரருக்கு அந்த ஆண்டில் வயசு ஐம்பது. கண்ணீர் சிந்திக் கொண்டு பாடம் சொல்லுகின்றார் கவிராஜ சேகரர். தமிழ் தந்த சி. வை. தாமோதரம் பிள்ளைக்கு அவர் உபாத்தியாயர். தமிழும் சைவமுந் தலை எடுக்க என்ன வழி என்று கவிராஜரின் இருதயந் துடிதுடிக்கின்றது.

இங்ஙனமாக இவர்கள் மூவரும் ஈழத்து மூன்று இரத்தினங்கள்; இலங்கா ரத்தினங்கள்.

முத்துக்குமார கவிராஜசேகரர் பறங்கிகளின் அதி பாதக அரசியலைக் கேள்விப்பட்டவர். ஒல்லாந்தரை அநுபவித்தவர். ஆங்கிலேயர் சூழ்ச்சிகளை நேரே கண்டு உணர்ந்தவர். "நல்லவழி காட்டுவோம் உடுபுடவை சம்பளம், நாளு நாளுந் தருகுவோம்" என்ற கவிராஜரின் பாட்டு, அப்பொழுதைய யாழ்ப்பாணத்தின் நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதொரு சுத்தப்பளிங்குக் கண்ணாடி. அந்தப் பாட்டிலிருந்து முளைத்து வளர்ந்த விருக்ஷந்தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். தமது ஐம்பதாம் வயதில் எழுதி வெளியிட்ட யாழ்ப்பாணச் சமய நிலை என்கின்ற அருமந்த புத்தகம்.

ஆறுமுக நாவலர் தமிழ் சைவம் என்கின்ற கொடியை உயர்த்திக் காண்டீபத்தை வளைத்து, எதிரிகள் ஏங்க நாணொலிசெய்து, வாகை சூடிய நவபாரத யுத்தம் உலகப் பிரசித்தமானது.

இந்தத் தமிழ் சைவ யுத்தத்தில் தோன்றாத் துணையாய், முன்னணிக்கு வாராமல், முதுகெலும்பு போல் பின்னணியில் இருந்து உதவிய ஒரு அந்தரங்க கிருஷ்ணர் உண்டு ஆனால், அந்த இரகசிய கிருஷ்ணர் தான் 1830 ம் ஆண்டில் உடும்பு புரட்டிய சிவ சங்கர பண்டிதர்.

சிவ சங்கர பண்டிதர் தந்தை வழியால் சுன்னாகத்தையும் தாய்வழியால் நீர்வேலியையும் சேர்ந்தவர். தந்தையார் சுன்னாகத்திற் பிரசித்தி பெற்று விளங்கிய சங்கரப்பிள்ளையின் புத்திரர் சிவகுருநாத பிள்ளை. தாயார் நீர்வேலியில் கௌரவத்துடன் வாழ்ந்த அருணாசலம்பிள்ளையின் புத்திரி தெய்வானை அம்மையார். தாய் மரபு தந்தை மரபு ஆகிய இருமரபுந் தூயவர். நீர்வேலியில் வசித்தமையால் நீர்வேலிச் சிவ சங்கர பண்டிதர் என்று இவரைச் சொல்லுவது வழக்கம்.

1829 ம் ஆண்டு விரோதி வருஷம் சித்திரை மாசம் 21 ந் தேதி வெள்ளிக்கிழமை சங்கர பண்டிதர் இந்த உலகில் உதயம் செய்தார். 41 வயசு 4 மாசம் 20 நாள் இவ்வுலகில் வாழ்ந்து, 1870 ம் ஆண்டு பிரமோ தூதவருஷம் புரட்டாசி மாதம் 12 ந் தேதி திங்கட்கிழமை சிவபதம் சென்று விட்டார்.

ஆறுமுக நாவலருக்கு $6\frac{1}{2}$ ஆண்டு பிந்தி வந்து, 9 ஆண்டு முந்திப் போய்விட்டார். கடவுள் சங்கர பண்டிதருக்குக் கொடுத்த ஆயுள் அத்தியற்பம்.

பண்டிதர் செய்த வேலைகள் சைவத்துக்கு அசைக்க முடியாத அத்திபாரம்.

"கற்பவை கற்க" "கற்பவை கசடறக் கற்க" "கற்ற பின் அதற்குத் தக நிற்க" என்று, கல்வி அறிவு ஒழுக்கங்களுக்குத் திட்டம் வகுத்திருக்கின்றார் வள்ளுவநாயனார். கற்கவேண்டியவைகளையே கசடறக் கற்க வேண்டு மென்பது நாயனார் கருத்து. அருமந்த இளமைப் பருவத்தில் கற்கவேண்டியவைகளை உரிய குரவர்களிடம், கசடறக் கற்கத்தக்க ஒரு வாய்ப்புப், பூர்வபுண்ணிய விசேஷத்தால், ஒருவருக்கு அமையுமானால், அதைவிட உயர்ந்த பாக்கியத்தை இந்த உலகிலே சொல்ல முடியாது.

இப்படிப்பட்ட கற்பவை கற்கின்ற உயர்ந்த பாக்கியம், நமது தாய் நாடும் சேய் நாடும் அந்நிய அரசாங்கத்தில் அகப்பட்டபின், யாருக்காயினும் அமைந்ததுண்டானால், அந்தப் புண்ணிய புருஷர்களை எண்ணி விரல் மடித்தால், தாய்நாட்டிலே ஒரு சிவஞான சுவாமிகள், இந்தச் சேய் நாட்டிலே ஒரு சிவசங்கர பண்டிதர் என்று இரண்டே விரல்களை மடித்து எண்ணிவிடலாம். சிவஞான சுவாமிகளுக்கும் சிவசங்கர பண்டிதருக்கும் கல்வியில் நிரம்பிய ஒப்புமையுண்டு. இருவரும் வடமொழி தென்மொழிகளை இலக்கண தருக்க வியாகரண அடிப்படையில் பயின்று, சைவாகம நுட்பங்களை உணர்ந்து, சுத்த அத்வைத சித்தாந்த நெறியில் தலை நிமிர்ந்து நிலைத்து நின்றவர்கள். இந்த வாய்ப்பு எளிதிற் கிட்டுவதொன்று அன்று. வேத சிரசுகளாகிய உபநிடதங்களை நன்கு பயின்றவர்கள் கூட அவற்றின் உண்மைகளைத் தெளிவிக்கும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் திருமுறைகளையும் திருக்குறளையும் படிக்கிற வாய்ப்புக் கிட்டாமையால், மிண்டிய மாயா வாதம் என்னும் கொடிய வலையிற் சிக்குண்டு போனார்கள். சிவஞான சுவாமிகளும் சிவசங்கர பண்டிதரும் செய்த புண்ணியமே புண்ணியம். அவர்களுடைய படிப்பும் போக்கும் ஒரேதன்மையானவைகள்.

நாவலர் அவர்கள் சின்னஞ் சிறு வயதிலேயே சீர்திருத்தக்காரராய் விட்டார்கள். எனக்குப் படிக்க நேரம் எது என்பார்களாம். சங்கர பண்டிதர் வடமொழி தென் மொழிகளை இங்கேயும், வடக்கே வேதாரணியம் திருப்புகலூர்முதலிய இடங்களிலும், தக்க குரவர்கள் சாஸ்திரிகளிடம் முறையாகப் பயின்றார். சிறப்பாகத் தருக்க வியாகரணங்களையும், இன்னும் வெகு சிறப்பாகச் சிவாகம நுட்பங்களையும் ஓதியுணர்ந்தார். தீக்ஷைகள் பெற்றுச் சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு, குருவை வழிபட்டுச் சிவாகமங்களைக் கற்கும் முறையிலேயே கற்றுணர்ந்தார். வேத உபநிஷதங்கள், சிவாகமங்கள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் பொருள் ஒருமைப்பட்டிருத்தலை நன்கு தெளிந்தார். நீர்வேலி புண்ணிய பூமி ஆயிற்று.

வடலியடைப்பு அருணசல சாஸ்திரிகள் முதலிய சம்ஸ்கிருத அறிஞர்களான பிராமண குருமார்கள், சபாபதிநாவலர் முதலிய மகாவித்துவான்கள், இன்னும் யாழ்ப்பாணத்திலே வடமொழி தென்மொழி வல்லவர்கள் என்றிருந்தவர் எல்லாம் சங்கர பண்டிதரின் வீட்டுத் திண்ணையிலே அவரிடம் படித்துத் தேர்ந்தவர்களே.

சிவபூசையிலும், பாடம் சொல்லுவதிலும், ஏடுகள் தேடிப் பரிசோதனை செய்து, புதிய ஏடுகளில் பிரதி செய்வதிலும், உபயோகமான நூலுரைகள் இயற்றுவதிலுமே பண்டிதர் காலங்கழித்தார்.

பறங்கிக்காரர் காலத்திலே பசுக்கொலைக்கஞ்சி இத் தேசத்தைத் துறந்த ஞானப் பிரகாச சுவாமிகள், சம்ஸ்கிருதத்திலே சிவஞானபோத விருத்தி முதலிய ஒன்பது சமய நூல்கள் செய்திருக்கின்றார்கள். அந்த நூல்கள் ஞானப் பிரகாச சுவாமிகள் காஷாயம் பெற்ற திருவண்ணாமலை ஆதீனம் முதலிய இடங்களில் மிகச் சிதைவுற்று இருந்தன. அவைகளைச் சங்கர பண்டிதர் தேடி எடுத்துப் புதிய ஏடுகளில் பிரதி செய்து வைத்திருந்தார். சங்கர பண்டிதரின் எட்டெழுத்துக்கள் அச்செழுத்துப் போல அழகானவைகள் என்று, நாவலர் அவர்களின் தமையனார் புத்திரர் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்கள் பாராட்டி வாயூறுவார்கள். பிள்ளையவர்கள் பிற்காலத்தில் அச்சிட்டு வெளியிட்ட ஞானப் பிரகாச சுவாமிகளின் கிரந்தங்கள், சங்கர பண்டிதர் முன்னமே தேடிப் பிரதி செய்து வைத்த பொக்கிஷங்கள்.

வடமொழி வியாகரணங்களைச் சுருக்கித் தமிழ் படிப்பவர்கள் படிக்கத்தக்க வகையில் மூன்று பாகமாகச் சங்கர பண்டிதர் ஆக்கியிருக்கின்றார். முதல் இரு பாகங்களும் அச்சில் வெளிவந்தவை. மூன்றுவது பாகம் கையெழுத்தில் இருக்கின்றது. உபாத்தியாயர் உதவி இன்றியே இந்த மூன்று பாகங்களையும் படித்துச் சம்ஸ்கிருதத்தில் தக்க விற்பத்தியைச் சம்பாதிக்கலாம்.

சைவப் பிரகாசனமும், கிறிஸ்துமத கண்டனமும் தருக்க அடிப்படையில் பண்டிதரால் ஆக்கப்பட்ட உயர்தர நூல்கள்.

யாழ்ப்பாணத்தின் இறுதித் தமிழ் விளக்கு என்று பாராட்டத்தக்க, தமிழ் அறிஞர் கோமானுகிய சுன்னுகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள், தம்மை அடைந்த மாணவர்கள் வைரமான–மரபு பிறழாத கல்வி கற்கும் பொருட்டுக் குறிப்பிடுகின்ற அத்திபார நூல்களில் இரண்டு நூல்கள் சங்கர பண்டிதர் இயற்றிய நூல்கள்.

ஒன்று வடமொழி வியாகரணச் சுருக்கமாகிய சப்த சங்கிரகம். மற்றது சைவப் பிரகாசனம் என்ற நூலின் முதற் பகுதியாகிய தருக்கப் பகுதி. இப் பகுதிக்குச் சாதாரண பீடிகை என்று பெயர். பீடிகை, இலக்கணம் பிரமாணம் என்று இரண்டு வகை. பிரமாணத்தில் பிரத்தியக்ஷம் அநுமானம் ஆகமம் என்ற அளவைகளும் அவற்றின் போலிகளும் வரும்.

இந்த இலக்கணமும் பிரமாணமுமாகிய இருவகையையும் எழுத்தெண்ணிக் கசடறக் கற்கும்படி வலியுறுத்திக் கற்பிப்பார்கள் குமாரசுவாமிப்புலவர் அவர்கள். மாணவர்கள் அதன் அருமையை அக்காலத்தில் உணரமாட்டார்கள். உணருங்காலம் நேர்ந்தால் புலவர் அவர்களைத் திக்கு நோக்கி நமஸ்காரம் செய்வார்கள். ஏனென்றுல், சைவப் பிரகாசன முகப்பில் பண்டிதர் அமைத்த சாதாரண பீடிகை, சிவ ஞான போதமகாபாஷியமாகிய இந்து மகாசமுத்திரத்தைக் கடத்தற்கு, ஒரு யந்திர வள்ளம் போல் உதவுவது.

சங்கர பண்டிதரின் அருமையை அறிந்தவர்கள், குமார சுவாமிப் புலவர் அவர்கள். பண்டிதர் இயற்றிய கிறிஸ்துமத கண்டனம் புலவர் அவர்களால் அச்சிடப்பட்டது.

பண்டிதர் இயற்றிய நூலுரைகள் பல இன்னும் அச்சில் வரவேண்டியவை இருக்கின்றன. பண்டிதர் அநேக சற்பிரசங்கங்கள் செய்திருக்கின்றுர். சிதம்பரத்திலே பச்சையப்பன் கல்லூரியில் தில்லைவாழந்தணர்கள் சாஸ்திரிகள் கூடிய சபையில் பதிலக்ஷணம் பற்றிச் சம்ஸ்கிருதத்தில் பண்டிதர் செய்த பிரசங்கம் சம்ஸ்கிருதம் வல்லவர்களாலேயே பாராட்டப்பட்டது. பண்டிதரின் சரித்திரச் சுருக்கமொன்று, அபிமானிகளால் இப்பொழுது வெளிவந்திருக்கிறது.

(வானொலியில் ஒலிபரப்பப்பெற்றது).

## அரசியல் திட்டத்தைத் திருத்தல்

(14 ம் பக்கத் தொடர்ச்சி)

நிதிகள் சபையின் நியமன அங்கத்தவர்களினதும் எதிர்காலம், அரசாங்க சேவைக் கமிஷன், சட்ட சேவைக் கமிஷன் ஆகிய விஷயங்களையும் கமிட்டி அவசியமெனக் கருதும் இதர விஷயங்களையும் கவனித்தல்.

இது அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த உறுதி மொழிகளுள் ஒன்றை நிறைவேற்றும் நோக்கத்தையுடையதாகும். "தற்போதைய அரசியற் திட்டம் 1946 ல், அதாவது நாம் குடியேற்ற நாட்டு ஆதிக்கத்தின் கீழ் இருந்த காலத்தில் தயாரிக்கப்பட்டதாகும். மேலும் இது, ஒரு சுதந்திர மக்களின் அரசியற் தேவைகளைச் சரியாகப் பரிசீலனை செய்யாமல் டொமினியன் அந்தஸ்து வழங்குவதற்காக 1947ல் திருத்தப்பட்டது. எனவே அரசியற் திட்டம் பல்வேறு விஷயங்கள் சம்பந்தமாகத் திருத்தப்பட வேண்டியிருக்கிறது. செனட் சபையின் அந்தஸ்தைப் பற்றிப் புனராலோசனை செய்தல் ; நியமன அங்கத்தவர்களின் ஸ்தானங்களை நீக்குதல் ; ஜனநாயக, பொருளாதார உரிமைகளை விளக்குதல் ; ஒரு ஜனநாயக குடியரசை ஸ்தாபித்தல் ஆதியன இவற்றுட் சிலவாகும்" இதுவே அரசாங்கமளித்த உறுதி மொழி.

## பொலிசுக்குப் பிரதமரின் பாராட்டு

பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா அவர்கள் பொலிஸ் சேவையைச் சேர்ந்த அனைவரையும் பாராட்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஒஸ்மன்ட் டி சில்வா அவர்களுக்கு ஒரு கடிதம் வரைந்துள்ளார். பிரதமர் அக்கடிதத்தில் கூறியுள்ளதாவது :—

"சமீபத்தில் சம்பவித்த கோரமான வெள்ளப் பெருக்கினுல் நாட்டிற்கேற்பட்ட நெருக்கடியான நிலைமையில் விலைமதிக்க வொண்ணுத உதவிகளைச் செய்த பொலிஸ் சேவையைச் சேர்ந்த எல்லா அங்கத்தவர்களுக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அவ்வுதவி உரிய காலத்தில் கிடைத்திராவிட்டால், நிலைமை, விசேஷமாக உயிர்ச்சேதம், ஏற்பட்டதைவிட மிகப்பாரதூரமானதாக இருந்திருக்குமென்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை".

# காணி அமைச்சின் வெள்ளத்தடுப்பு நடவடிக்கை

**பிரதிநிதிகள் சபையில் காணி அமைச்சர் திரு ஸி. பீ. டி சில்வா விளக்கம்**

வெள்ளத்தால் சேதமடைந்த நீர்ப்பாசனத் திட்டங்களையும் குடியேற்றத்திட்டங்களையும் கூடிய விரைவில் சாதாரண நிலைக்குக் கொண்டு வரும்பொருட்டு அவற்றிற் கேற்பட்ட சேதங்களைப் பழுது பார்ப்பதில் தமது மந்திரி காரியாலயமும் தமது அதிகாரத்தின் கீழுள்ள அரசாங்கப் பகுதிகளும் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுள்ளன வென்பதை பிரதிநிதிகள் சபையில் நடை பெற்ற ஒரு விவாதத்தின் போது பேசிய காணி, காணி அபிவிருத்தி மந்திரி திரு. ஸி. பீ. டி. சில்வா விளக்கிக் கூறினர்.

சமீபத்தில் பெய்த மழையைப் போல் முன்னெப் பொழுதும் அவ்வளவு மழை பொழிந்ததாகத் தெரியவில்லை யென்று கூறிய மந்திரி அவர்கள் தொடர்ந்து பேசியதாவது: "சுமார் இரண்டு மாத காலமாக இலங்கையில் தொடர்ச்சியாக பெருமழை பெய்தது. இதனுல் குளங்களில் நீர் வழிந்தோடும் அளவிற்கு நிரம்பிவிட்டது. எனவே டிசெம்பர் மாதம் 20 ந் திகதிக்கும் 25 ந் திகதிக்கு மிடையில் பெருமழை பொழிய ஆரம்பித்ததும் இம் மழைத் தண்ணீரும் குளங்களுக்கே போய்ச் சேர வேண்டியிருந்தது. ஏனெனில், முன்பு பெய்த மழையால் நிலம் நன்ருக ஊறிப் போய் இருந்தது. இதன் விளைவாக குளக் கட்டுகள் உடைந்தன.

"முன்னெப் பொழுதுமே பெய்யாத அவ்வளவு மழையால் ஏற்பட்ட இந்த நிலைமையைச் சமாளிக்கக் கூடியதாக எந்த நீர்ப்பாசனத் திட்டமும் தயாரிக்கப் படவில்லை. எதிர் பார்க்கப்படக் கூடிய அளவு வெள்ளத்தைச் சமாளிக்கவே பெரும் பாலான நீர்ப்பாசனத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆனல் சமீபத்தில் ஏற்பட்ட சம்பவம் எதிர்பார்க்கக் கூடிய மிகவும் மோசமான நிலைமையினும் மோசமானதாகும்."

"உடைந்த குளக்கட்டுகளைப் பழுது பார்ப்பதற்கு ஏற்கெனவே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. அடுத்த போக காலத்தில் உபயோகிக்கப்படுவதற்குத் தண்ணீரைச் சேமிக்கும் பொருட்டு உடைந்த குளக்கட்டுக்களைப் பழுது பார்க்கும் வேலையில் ஏராளமான தொழிலாளர் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர். மிகவும் உயரமாக இல்லாதிருந்த கிராமக் குளக்கட்டுகளும் அல்லே, பாவற் குளம், இரணைமடு போன்ற பெரிய குளங்களின் கட்டுகளும், தென் மேற்குப் பருவக் காற்று மழைக் காலத்தில் பொழியும் மழை நீரைச் சேமிக்கக் கூடியதாக மார்ச் மாதத்துக்கு முன் பழுது பார்க்கப் படும்."

"கலாவேவா போன்ற குளங்களின் உயரமான கட்டுகளிலும் பழுது பார்க்கும் வேலை ஆரம்பிக்கப் படும். தென் மேற்குப் பருவக் காற்று மழை பொழிய ஆரம்பிப்பதற்கு முன் உடைப்புகள் பழுது பார்க்கப்பட்டுவிடும்."

"எலஹெர வாய்க்கால் முறை, ஹுருலுவேவா போன்றவற்றில் ஏற்பட்டிருக்கும் உடைப்புகளைப்பழுது பார்க்கும் வேலை மேற்கொள்ளப்பட்டு செப்டெம்பர் வாக்கில் பூர்த்தியாக்கப்படும்."

"இப்புனருத்தாரண வேலையை கூடிய விரைவில் செய்து முடிப்பதற்கு எங்களால் இயன்றவரை எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறேம். நீர்ப்பாசனப் பகுதி உத்தியோகத்தர்கள் இவ்வேலையை ஒரு தேச சேவையெனக் கருதுகிருர்களென்பதில் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு. நான் விஜயஞ் செய்த பெரும்பாலான இடங்களில், நீர்ப்பாசனப் பகுதி உத்தியோகத்தர்கள் தங்களுக்கேற் படக்கூடிய பெரிய ஆபத்துகளைக் கூடப் பொருட் படுத்தாமல் வேலையைச் செய்து முடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிருர்கள். டிசெம்பர், 24, 25 ந் திகதிகளில் இவர்கள் தங்கள் உயிரைக்கூடப் பெரிதாகக் கருதாமல் மிகக் கஷ்டப்பட்டு இவ்விடங்களுக்குச் சென்றிருக்கிருர்கள். இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இவர்கள் செய்து வரும் பாரிய கைங்கரியத்தைக் குறித்து இச்சபையும் இவர்களுக்குத் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுமென நான் உறுதியாக நம்புகிறேன்."

"நீர்ப்பாசனப் பகுதியையும் காணி மந்திரி காரியாலயத்தையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தமக்குள்ள மகத்தான பொறுப்பை நன்குணர்ந்தவர்களாவர். தாங்கள் மேற்கொள்ளும் வேலை எவ்வளவு பிரமாண்டமானதென்பதை அவர்கள் நன்கறிவார்கள். நில அளவைப் பகுதி, நீர்ப்பாசனப் பகுதி, காணி அபிவிருத்திப் பகுதி, காணி அதிகாரியின் பகுதி ஆதியனவற்றையும் காணி மந்திரி காரியாலயத்தின் கீழுள்ள ஒவ்வொரு பகுதியையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மிகுந்த கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியிருந்ததென்பதை நான் நன்கறிவேன். புனருத்தாரண வேலையைச் செய்து

முடிப்பதில் இவர்கள் தங்களால் இயன்றளவு பாடு பட்டுழைக்கிறார்கள்."

"தங்களின் சொந்த நன்மைகளையும் சௌகரியங்களையும் பொருட்படுத்தாமலும், தேசத்துக் கேற்பட்டுள்ள இந்தக் கஷ்ட காலத்தில் சில சலுகைகளைத் தங்களுக்குப் பெற்றுக்கொள்ள முயற்சிக்காமலும், வேலையைத் திறமையாகச் செய்து முடிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், இப்பகுதிகளைச் சேர்ந்த மிகவும் உயர்ந்த பதவியிலுள்ள உத்தியோகத்தர் முதல் ஆகச் சிறிய பதவியை வகிக்கும் ஊழியர் வரை எல்லோரும் ஒன்றுபோல் எதிர்வரும் மாதங்களில் முழு மூச்சுடன் வேலை செய்வார்களென்பதை இச்சபையில் என்னால் உறுதியாகக் கூறமுடியும்."

"தொழிலாளர் தகராறுகள் இருந்தனவென்பது உண்மையே. ஆனால் தேசத்துக் கேற்பட்டுள்ள இந்த அவசர காலத்தில் எல்லா உத்தியோகத்தர்களும் தோளோடு தோள் நின்று பணிபுரிகிறார்கள். இந்தப் புனருத்தாரண வேலை முழுவதையும் இவ்வருடக் கடைசிக்குள் செய்து முடித்துவிட முடியுமென நான் நம்புகிறேன். ஏற்பட்டுள்ள சேதங்களை நேரிற் கண்ட நான் இது சாத்தியப்படுமென எதிர்பார்க்கவில்லை. இது ஒரு பிரமாண்டமான வேலையாகும்."

சேதமடைந்த பிரதேசங்களிலுள்ள உத்தியோகத்தர்களும் மக்களும் ஒருபுறமிருக்க ஏராளமான தொண்டர்களும் சேவை செய்ய முன்வந்திருக்கிறார்கள். இவர்களை இப்போதைக்கு இவ்விடங்களுக்குக் கொண்டு செல்ல முடியாது. ஏனெனில் அவர்களுக்கு அவ்விடங்களில் இடவசதி யளிக்க வேண்டியிருக்கும். வீடுகளையிழந்து கஷ்டப்படும் மக்களுக்கு இடவசதியளிக்கும் வேலை ஏற்கெனவே எம்மைச் சார்ந்திருக்கிறது. ஆகவே இத் தொண்டர்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளும் அதே நேரத்தில், அவர்களை மேற்படி இடங்களுக்கு அனுப்புவது அசாத்தியமான காரியமென்பதையும் அவர்களுக்குக் கூறவேண்டியிருந்தது."

"இதர பிரதேசங்களைப்போல் சேதத்துக்குள்ளான எனது தொகுதிக்குச் சென்று நிவாரணமளித்த தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் அரசியற் கட்சிகளுக்கும் ஏனையோருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற் கேற்படும் செலவை அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டியது இயற்கையே. ஒருவர் எவ்வளவு பணக்காரராய் இருப்பினும் இவ்வேலையை அவர் செய்து முடிப்பது அசாத்தியம். ஆனால் தங்களால் அளிக்கக்கூடிய உதவி எவ்வளவு சிறியதாயிருந்த போதிலும் வெள்ளப் பெருக்கினால் சேதத்துக்குள்ளானவர்களுக்கு உதவிபுரிய வேண்டுமென்ற திடசித்தம் மக்களனைவரிடத்தும் காணப்பட்டது. இதற்கு நாங்கள் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். மேலும் தற்சமயத்தில் நிலவும் புத்துணர்ச்சியின் பக்க பலத்துடன் முரண்பட்டிருந்த எல்லாப் பிரிவுகளும் ஒன்று கூடி வேலை செய்வதாக இருந்தால் எமது கஷ்டங்கள் அனைத்தும் நீங்கி விடுமென்பதை நான் திடமாக நம்புகிறேன். இப்படிச் செய்வோமானால் புனருத்தாரண வேலை மட்டுமல்லாமல் நாட்டின் சுபீட்சத்துக்கான தேசிய அபிவிருத்தி வேலைகளும் சிறப்பாக நடந்தேறும்."

---

## ஆனையிறவு............

(15 ம் பக்கத் தொடர்ச்சி)

வீரத்தாய் மார்கள் பிறந்த இடமல்லவா ? அதில் அவதரித்த யுவதிகள் எப்படியிருப்பார்கள். ஆறுதல் கூறினாள். அண்மையில் நிரூபிக்கிறேன். "மனைவியாலும் இயலாது" என்ற வார்த்தையை என்று வீரமொழிபகர்ந்தாள்.

மறுநாட்காலை வார்க்கயிறு சகிதம் காட்டைநோக்கினாள் அம்மாது. காட்டில் மதம் பிடித்த களிறைக் கண்டாள். தனது பதிவிரதாதர்மத்தின்—கற்பின் பெருமையைக் கொண்டு வார்க்கயிற்றின் வடத்தை வீசிப்பிடிக்கப்பட்டயானை பின்தொடர அவள் முன் சென்றாள். உவர் நீர்த் தொட்டியென்னுமிடத்தில் யானையைக்கட்டி விட்டு கணவனிடம் சென்றாள். யானை பிடித்ததையும் கூறி விட்டாள். கணவனின் உவகை கேட்கவும் வேண்டுமா ? ஏன் ? அந்த நாடே ஆச்சரியத்தில் மூழ்காமலிருக்குமா ?

தனது மானம் போயிற்றென அந்த நயவஞ்சகன் மெய்க்காப்பதிகாரி நினைத்தான். அதுமட்டுமா அரசியின் தண்டனை ? தனது கையாட்களைக் கொண்டு அன்றிரவோடு இரவாக அந்த வீரமாது—முதல் அமைச்சன்மனைவியை சதித்திட்டத்திற்குப் பலியாக்கினான்.

மதம்பிடித்த களிறு கட்டுண்ட இடத்தில் பல நாட்களாக அன்னாகாரமின்றி இறந்துவிட்டது. அதை அடக்கியாளும் ஆடவர்கள் அங்கு இருந்தால்தானே. எனவேதான் இன்று "ஆனையிறவு" என்ற பெயர் வரலாற்றின் சின்னமாக எம் முன் காட்சி நல்குகின்றது. எமது அஞ்சலி தாய்க்குலத்திற்கு—அந்த வீரமாதுக்கும்.

குறிப்பு.—இக்கதை வன்னியர் காலத்தில் எழுதப்பட்ட ஓர் "கிராமிய இலக்கிய" ஏட்டுச்சுவடியில் கவிதையாக இருந்தது. அதை ஈண்டு கட்டுரையாகத் தந்துள்ளேன்.

# அலங்காரரூபன்

தயாரிப்பு : அருள்செல்வநாயகம்

(முன் தொடர்ச்சி)

அலங்காரரூபன் மறுத்தும் தோழிப்பெண்கள் அவனை விடாமல் அலங்கார ரூபியிடம் அழைத்துச் சென்றார்கள். ஏனம்மா தாயே என்னை அழைத்தாய் என்று அவன் வினவுகிறான்.

அலங்காரரூபன் கொச்சகம் :

செம்மாந்த பெண்களெனைத்தே டியழைத்
தோடியிங்கே
சும்மாபிடித்திழுத்துத் துங்கமுடன் வாறார்கள்
நம்மாலியன்ற நயஞ்சேர் பணிவிடைகள்
அம்மாசுறுக்கில் அறைந்தே அனுப்புவாயே.

அவனது ஆத்திரத்தைக் கண்ணுற்ற அலங்கார ரூபி அவனை ஏறிட்டு நோக்கிறாள். உங்களைப் பார்த்தால் விறகு வெட்டிச் சீவிப்பவராகத் தோன்றவில்லை. விதிவசத்தால் இவ்வாறு வந்துவிட்டீர்கள் போலிருக்கிறது. உங்களது வரன்முறையைச் சொல்வீர்களா எனக் கேட்கிறாள்.

அலங்காரரூபி கொச்சகம் :

சந்தனமாமிந்தனங்கள் தானே சுமந்துகொண்டு
விந்தையுடன் விற்கவிலே பேசிவந்தவரே
எந்தவூர் பேரேது என்னை நீரார் புதல்வன்
சிந்தை மகிழ்ந்திப்போ தெரியவுரை செய்வாயே

அவளிடம் சொல்வதிற்தான் என்னதவறு எனக் கண்ட அலங்கார ரூபன் தனது கதையையே சொல்லுகிறான். தனது வரலாற்றையே உரைத்து விடுகிறான்.

அலங்காரரூபன் விருத்தம் :

திருவளரழகாபுரியரசாண்ட திறலதி வீரசூரேந்திரன்
செய்திடு தவத்தினெய்திடும் பவத்தில் திகழலங்
காரரூபன்யான்
உருவளரெனக்குத்திரு மணம் முடிக்க ஒகையாய்
நாகநாட்டரசன்
ஒருமடமகளை மரபொடு கேட்க உளத்தவன் வழுத்திடு
சினமாய்
பொருபடை திரட்டிச் செருக்களத்திடையே தந்தை
யைச் சிந்திவந்தென்னை
தடக்கையை யறுத்து விடக்கனவனத்தில் தவத்தி
யன்தறித் தகை படைத்தான்
வெருவருமிடியால் அடவியில் விறகுவெட்டியே
கட்டிவந்திங்கே
விற்கிறேன் அலைந்து நிற்கிறேன் தலைவிதியும்
எப்படி அறியேன்

அலங்காரரூபனின் வரலாற்றைக் கேட்ட அலங்கார ரூபி கண்ணீர் வடித்தாள். தனது உள்ளகத்தே உறைந்த காதலனே விறகு சுமந்து வந்தவன் என்பதை நினைத்துப் பார்க்கவே அவளுக்கு வேதனையாக இருந்தது. இருந்தும் உள்ளத்தே உறைந்த காதலனைக் கண்டுவிட்டோமென்ற பெருமிதம் இருந்தது. அவள்தான் தனது காதல் தேவி அலங்காரரூபி என அறிந்த அவன் ஆசை தவழ அவளைப் பார்த்தான். இரு உள்ளங்களும் பூரண அன்பினாலே கட்டுண்டன. காதல் பெருக்கெடுத்தோடியது.

நானன்னு நன்ன நானன்ன நானன்ன
நானன்னு நன்ன நானன்ன நானன்ன
நானன்னு நன்ன நானன்ன நானன்ன
நானன்ன நான நானே.

அலங்காரரூபி :

மன்னனே மெத்த வருந்தியே அலைந்தாய்
மாரனே மங்கை மார்குணாளனே
வனமதிலிந்தவிறகினை ஒடித்துநீ
வந்தபோதிலே நொந்ததெனுடம்பே.

அலங்காரரூபன் :

கன்னியே வன்ன அன்ன மின்னாளே
கானகந்தனில் வாசனை புரியும்
காந்த மாமகில் சந்தனமரங்களை
காதலால் வெட்டி விற்றிடக் கொணர்ந்தேன்

அலங்காரரூபி :

வெட்டியே விறகொடித்துமே பிளந்த
வேந்தனே யெந்தன் ஏந்தலே கேளாய்
வீரசூரனே மாரனே துரையே
மெல்லி மார்மயல் பூணுமுத்தமனே

அலங்காரரூபன் :

வட்டமாகிய மதிமுகமுடைய
வஞ்சியே மரகதமே ரெத்தினமே
வந்தனை பண்ணி உந்தன் தன் பெயரை
வாகுடன் எனக்கு ஓதும் பெண்ணமுதே

அலங்காரரூபி :

ஓதுவேன் நாக மன்னவன் மனைவி
உற்றமாதுதன் வயிற்றினிலுதிக்க
ஒயிலுடன் அலங்காரரூபி யென்று
உறுதியாய் நாமமிட்டனரே.

அலங்காரரூபன் :

மாதுபோலெனை மேவ வென்றிசைந்த
வஞ்சியே நானும் கொஞ்சும் நற்கிளியே
மையலாய் மனமுருகுதே பாராய்
மங்கையே ஒருவார்த்தை சொல்லாயோ

அலங்காரரூபி :

சொல்கிறேன் வெட்கமாகவே வருகுது
தோன்றலே காமநீர்துடைவழியுது
சோலியாய் என்னைக் கேலி பண்ணுமலே
சூரனே மானிலத்தணைவோம்.

அலங்காரரூபன் :

வல்லியே மங்கைமார்களுக் கரசே
வந்துநீ யிங்கே குந்தடி பெண்ணே
மானிளங் கன்றை மருவியகலை போல்
மதனும் ரதியும் போலெழுந்தனரே.

காதலனைக் கண்டு உளம்பூரித்த அலங்காரரூபி உள்ளன்புடன் தனது கணையாளியைக் கழற்றி அவனது விரலிலே போட்டாள். ஏழைக் கோலத்துடன் வந்த காதலனைச் செல்வக் கோலத்துடன் அனுப்ப முனைந்தாள். அடுத்த தடவை வரும் போது வியாபாரிபோல் வரும்படி வேண்டிய திரவியங்களை யெல்லாம் கொடுத்தனுப்பினுள். கானகம் சென்ற அலங்கார ரூபன் எப்படிக் காதலியைக் காணுது இருப்பான். ஆகவே அவள் சொன்ன படியே வியாபாரிபோல் வேடமணிந்து நாகநாட்டு வீதிகளிலே பொருள்விலை கூறிவருகிறுன்.

அலங்காரரூபன் :

சீலக்கராம்பு குங்குமப்பூ சிறு நாகப்பூ
செண்பகப்பூ
சாலக் கொழுப்பு ஆடவர்க்குத் தழைக்கும்
மதனகாமியப்பூ
வேலப்பழுப்பு வெளுப்புவிட விளங்குங் கைப்புக்
களிப்பாக்கு
ஏலம் தற்கோலம் செவ்வள்ளி— நல்ல
இலவங்கம் மரமஞ்சள் உள்ளி
நீலங்கைச் சோலம் நான் அள்ளி தாறேன்
நீர் கொள்ளும் லாபத் தைத்தள்ளி.

சாதிக்காய் ஆமலக்காய் தாண்டிக்காய்
செந்நெற்காய்

வாதிக்காய் ஆதளைக்காய் வாய்த்தகடுக்காய்
மாசாக்காய்

காதிற் சருவும் விடத்தற்காய் காட்டு மாங்காய்
கடல் தேங்காய்

சூதம் கெந்தகம் அரிதாரம்— பச்சை
துரிசிதுத்தம் நவச்சாரம்
கோதறு பச்சைக் கற்பூரம்— தாறேன்
கொள்ளுங்கோ ஆரு மின்னேரம்

சாற்றுங் கடுகு வெண்கடுகு தம்பனக்கடுகு திரிகடுகு
நாற்றுந்தவள மிளகரத்தை நற்சீரகம்
வெந்தயம் கறுவா
போற்று மதுரம் வசுவாசி புனுகு சட்டம்
பொன்னும்பல்

ஏற்ற இச்சரக்குகளுண்டு— நீங்கள்
எடுத்திடும் விலையெனக்கண்டு— மனந்
தேற்றி அளவுக் கோர்துண்டு— நானும்
தூக்கித்தாறேன் களிகொண்டு.

கோட்டமதுரமதிவிடயம்குக்கில் சூடம் சாம்பிராணி
ஈட்டுந் தேவதாரமசில் நாலுவகைக்காரம்
நாட்டுக்கரிதாரம் கல்நார் நாலுதுறையும்
நான்சுமந்து

வாட்டத்துடன் அப்பாவாரேம்— இங்கே
மலிவாக நெறுத்திப் போதாரேம்—சுவாமி
தாட்டுனையாகவே போரேம்—வேறேர்
தப்புத்திப்பா யொன்றுங் கூறேம்.

கொத்தமல்லி பெருங்காயம் கோரோசனை
வெண்குந்திரிகம்
வைத்த வசம்பு பெரும்குரும்பை வருசீரகம்
வாலுளுவை
பச்சமஞ்சள் இஞ்சிபஞ்சிபட்டுச்சுமந்து வந்தேன்.

பத்துக்கொன்று லாபத்தைப் போடும்— இந்த
பாரத்தை யார் தாங்கக்கூடும்— விற்று
போட்டால் என்னுடைய பாடு— மெத்த
வேடிக்கையாகச் சாப்பாடு

கஞ்சா அபின் கற்பூரமொடு கசகசா பூமத்தைவிதை
அஞ்சாக்கராம்பு பேய்மருட்டி அனைத்தும் சரியாய்
நிறுத்தெடுத்து
மஞ்சாதானைப் பாலெடுத்து வார்த்துச் சேர்த்த
குளிகையுண்டு

**அஞ்சாதிதைக் கொண்டு உண்ணும்—ஒரு**
**யானைக்குள்ளபெலன்பண்ணும்**
**துஞ்சாதிருந்து நீஉண்ணும்—பெண்கள்**
**சூரசம்போகங்கள் பண்ணும்.**

இவ்வாருக விலை கூறிவந்த அலங்காரரூபனை அலங்காரரூபி அழைக்கிருள். காதல் பாதைனயச் செப்பனிடவேண்டுமல்லவா? பிரிந்தவர் கூடுகிருர்கள். காதல்பாதை கடிமணத்தில் வந்து நிற்கிறது. கதையெல்லாம் சுபமாகத்தானே முடியவேண்டும். விறகு வெட்டியாக வந்த அலங்கார ரூபன் இறுதியில் மாப்பிள்ளையாக மாறுகிருன். மணமும் நடைபெறுகிறது.

**அலங்காரரூபி :**

**மதனத்துரையே நரபதியே—யார்க்கும்**
**வரமொய்த்ததுவும் சுரர்பதியே**
**அதனப்பிரபல ரதிபதியே—என்னை**
**அடிமை கொள்ள வந்தவரே**

**அலங்காரரூபன் ;**

**மதுரக்கிளியே அறிவிளந்து—உன்னிட**
**மையற்கடலி னிடைவிழுந்து**
**கலிபெற்றிடவே கடிதெழுந்து—உந்தன்**
**கருணைப்படி நான்வந்தேனடி**

**அலங்காரரூபி :**

**சோறுண்ணுமலருவருத்து— என்னிட**
**துய்ய கொங்கை விருவிருத்து**
**மீறியவிரகம் தருதருத்து— மெத்த**
**விசனப்பட்டேன் என்னரசே.**


**அலங்காரரூபன் :**


**ஊறுமருந்திதழுண்டுதாறேன்— பெண்ணே**
**உள்ளுக்குள்ளாய் மெள்ளக் கொண்டு**
**மீறிய விரகம் நீ கைக் கொண்டு—இங்கே**
**மேவுவோம் வா பெண்ணரசே**

*(வானெலியில் ஒலிபரப்பப்பெற்றது.)*

---

பிரதம மந்திரி (இடப்புறம்) அவர்கள் இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானீகர் திரு. மாக்ஸ்வெல் எச். இளக் அவர்களுடன் அமெரிக்க ஹெலிகொப்டரை விட்டிறங்கி வருவதைப் படத்தில் காண்க.





ரெஸ்மீட் பிளேஸிலுள்ள நமது பிரதமரின் இல்லத்திற்கு வருகை புரிந்த பிரித்தானிய பிரதமர் மக்மில்லன் அவர்களுடன் ஆசியாவின் நிலையைப்பற்றி பிரதமர் அளவளாவுகிருர். சுவாரஸ்யமான ஒரு கட்டம்.

# பிரிட்டிஷ் பிரதமருக்கு குதூகல வரவேற்பு

**பல்லாயிரக்கணக்கான மக்களின் ஜயகோஷத்துக்கிடையே ராஜபவனி**

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் மாக்மிலன் அவர்களும் மாக்மிலன் சீமாட்டியும் பல நிகழ்ச்சிகளடங்கிய இரு தினங்களை இலங்கையிற் கழித்துவிட்டு ஜனவரி 18, சனிக்கிழமை யன்று காலை இங்கிருந்து புறப்பட்டுச் சென்ருர்கள்.

**16.1.58** வியாழக்கிழமையன்று இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் சகிதம் இராஜாங்க மரியாதைகளுடன் பவனிவந்த பிரிட்டிஷ் பிரதமரை கட்டுநாயக்காவிலிருந்து இராணிமாளிகை வரை பாதையின் இருமருங்கிலும் குழுமிநின்ற ஆயிரக்கணக்கான மக்கள் ஜெயகோஷங்களிட்டு வரவேற்ருர்கள்.

“விமான நிலையத்திலிருந்து கொழும்பு நகர் வரை, ஆயிரக்கணக்கான மக்களின் அன்புகனிந்த உற்சாகமான வரவேற்புடன் நான் வந்த பவனியை என்றென்றும் நான் மறக்கவே முடியாது. என் மனைவியும், நானும் இச் சிறந்த வரவேற்பை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருப்போம்” என்று திரு. மாக்மிலன் அவர்கள் கொழும்பு வந்து சேர்ந்ததும் கூறினுர்.”

அவர் மேலும் கூறியதாவது :—

“இங்கு நான் தங்கியிருக்கும்போது உங்கள் பிரதமருடன் உபயோகமான சில பேச்சு வார்த்தை

களை நடாத்தி இங்கு என்ன நடைபெறுகிறதென் பதைப்பற்றியும் உங்கள் ஸ்தாபனங்களைப்பற்றியும் என்னால் அறிந்துகொள்ளக்கூடியதாக விருக்கும். இன்னும் நான் வனப்புமிக்க உங்கள் தீவைச் சிறிதளவு சுற்றிப்பார்க்கவும் விரும்புகிறேன்.

"அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் உண்டான சேதத்தையும் அதனால் மக்களுக் கேற்பட்ட துன்பத்தையும் கேள்வியுற்று ஐக்கிய இராச்சியத்திலுள்ள மக்கள் அனைவரும் மிகுந்த வருத்தமடைந்தார்கள். இந்நாட்டு மக்க ளுக்கு அபாயம் ஏற்பட்ட வேளையில் ரோயல் கடற் படையும், விமானப்படையும் உடனடியாக வந்து உதவி புரியக் கூடியதாக விருந்ததையிட்டு நான் அதிக மகிழ்ச்சியடைகிறேன்.

"பிரிட்டிஷ் பிரதமர் ஒருவர் பதவியிலிருக்கும் காலத்தில் இலங்கைக்கு விஜயஞ் செய்வது இதுவே முதற்தடவையாகும். பிரிட்டிஷ் மக்கள் அனைவ ரதும் ஆசியையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்".

பின்னர் திரு. மாக்மிலன் அவர்கள் இலங்கைப் பிரதமரை அவரது உத்தியோகப்பற்றற்ற வாசஸ் தலமான ரெஸ்மீட் பிளேசில் சந்தித்து ஒரு மணித் தியாலம் வரை உலக விவகாரங்கள் பற்றி குறிப் பாக ஆயுதப்பரிகரணம், ஆசிய நாடுகளின் விவ காரங்கள்பற்றி உரையாடினார். இலங்கைக்குத் தற் போதேற்பட்டுள்ள கஷ்டம் சம்பந்தமான பேச்சு வார்த்தைகளும் இதில் இடம் பெறத்தான் செய் தன

திரு. மாக்மிலன் அவர்கள் 17.1.58 வெள்ளிக் கிழமையன்று கண்டி தலதா மாளிகையைத் தரிசித் தார். பின்னர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடை பெற்ற ஒரு விசேஷ பட்ட மளிப்பு விழாவில் சட்டக் கலாநிதி எனும் கௌரவப் பட்டம் அவருக்களிக்கப் பட்டது.

பிரிட்டிஷ் பிரதமரை கௌரவிக்கு முகமாக எமது பிரதமர் "ரெம்பிள்ட்ரீஸில்" அளித்த ஒரு விருந் துபசாரத்தில் திரு. மாக்மிலன் கலந்துகொண்டார். தகவற் பகுதியின் சினிமாப் படப்பிரிவு தயாரித்த வெள்ளம் சம்பந்தமான இரண்டு படங்கள் அங்கு திரையிடப்பட்டன. பின்னர் செனட் சபைத் தலை வரும் சனப்பிரதிநிதிகள் சபைச் சபாநாயகருமொன்று கூடி கால்பேஸ் ஹோட்டலில் பிரிட்டிஷ் பிரதம ருக்கு ஒரு விருந்தளித்தார்கள்

திரு. மாக்மிலன் சனிக்கிழமை காலை ஆஸ்தி ரேலியாவுக்குப் பிரயாணமானார்.

## எதிர்காலத்தில் பொதுநல அமைப்பின் பங்கு

### விருந்து வைபவத்தில் பிரிட்டிஷ் பிரதமர் வெளியிட்ட கருத்து

"பொதுநல அமைப்பு முறையில் அதிக நன்மை யுண்டு. அதனை உலக மக்களின் சுபீட்சத்துக்காக நன்கு பயன்படுத்துவோமாக. பிரிட்டனிலுள்ள நாங்கள் சமாதானத்தையே விரும்புகிறோம். பொறு மையும் பகுத்தறிவும் காட்டினால் உலக சமாதான நோக்கம் உண்மையில் கைகூடும் என்பதே எனது நம்பிக்கை" என்று பிரிட்டிஷ் பிரதமர் ஸ்ரீ மாக் மிலன், இலங்கை செனேற், பிரதிநிதிச் சபைத் தலைவர்கள் சேர்ந்து கால்பேஸ் ஹோட்டலில் அளித்த விருந்தின்போதுபேசுகையில் குறிப்பிட்டார்.

இரு சபை அங்கத்தவர்களில் எல்லாக் கட்சியின ரும் வந்திருந்தனர். ஸ்ரீ மாக்மிலன் தமது பேச்சில், பார்லிமென்டரி முறையின் மேன்மையை வற்புறுத்தினர். இதில் பேச்சு, முதலிய பல சுதந்திரங்கள் இருப்பதால் இதைக்காக்க வேண்டு மென்றார். "சென்ற 10 வருஷங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பொதுநல அமைப்பு முறியவில்லை. அது வளர்ந்துவருகிறது. இதி லுள்ள எல்லா நாடுகளும் சர்வசமமாகவும் சுதந்திர மாகவும் திகழ்கின்றன" என்று கூறிய ஸ்ரீ மாக் மிலன் பொருளாதார அபிவிருத்திக்கு, மூலதனம் அவசியமென்றும் அதற்குத்தக்க உத்தரவாதமளிப் பதாயின் அது தடையின்றிக் கிடைக்குமென்றும் குறிப்பிட்டார். மேலும் இலங்கை காட்டிய நல் லெண்ணத்தை தாம் என்றென்றும் மறக்கமுடியா தென்றும், இதனால் இரு நாடுகளின் நேச உறவுக ளும் பலப்படுமென்றும், ஸ்ரீ மாக்மிலன் நன்றி தெரிவிக்கையில் கூறினர்.

ஸ்ரீ பண்டாரநாயக்கா முதலில் பேசுகையில் பிரிட் டிஷ் ஏகாதிபத்தியம், பொதுநல அமைப்பாக மாறி வளர்ந்துள்ளதாயும், பிரிட்டிஷாரின் விவேகமும் பகுத்தறிவுமே இதற்குக் காரணமென்றும் கூறிய துடன் உலக சமாதானத்துக்காக, மத்தியவழியை ஸ்ரீ மாக்மிலன் பின்பற்றுவாரென்றும், அவர் சமாதா னத்துக்காகச் செய்யும் முயற்சியில் இலங்கையின் முழு ஆதரவும் அவருக்கு இருக்குமென்றும் அவர் முயற்சி வெற்றி பெறுமென்று நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

# வீரத்துறவி விவேகானந்தர்

(திரு. வெ. சு. நடராசா, அரசாங்க பிரசுர நிலையம், கொழும்பு)

"சகோதர சகோதரிகளே" என்ற கர்ச்சனையுடன் தனது பேச்சை ஆரம்பித்தது ஒரு சிங்கம். எங்கே ? எப்பொழுது ? 1883 ம் வருடத்திலே, அமெரிக்க நாட்டிலே, சிகாகோ நகரிலே, சர்வமதமகாசபை மண்டபத்திலேதான். ஆங்கில மொழியின் சரித்திரத்திலே இவ்வாறு பிரசங்கத்தை ஆரம்பித்த பெருமை ஒரு இந்துத் துறவியையே சார்ந்ததாகும். கம்பீரமான தோற்றம், கணீரென்றகுரல், வீறு கொண்ட உற்சாகம். பூரண சந்திரன்போன்ற வதனம். ஞான ஒளி வீசும் கண்கள். காவி உடையணிந்து தலையில் ஒரு மிடுக்கான தலைப்பாகை. இடுப்பைச் சுற்றிவளைத்து ஒரு சால்வைக்கட்டு. இவைகளைக் கொண்ட ஒரு உருவம்தான் இந்து மதத்தின் பிரதிநிதியாக, இந்திய நாட்டிலிருந்து இம்மகா நாட்டிற்குச் சென்றது. இந்தத் தோற்றத்தையுடைய துறவியார் ? இவரே நமது அன்புக்குரிய விவேகானந்த சுவாமிகளாவர்.

ஆம், பாரத நாட்டின் தவப்புதல்வர்களிற் தலைசிறந்த இவரைப் பற்றி நாம் அறிந்திருத்தல் அவசியம். இவரை அறிவது இந்துமதத்தை அறிவதாகும். இந்து மதத்தை அறிவது இவரை அறிவதாகும். எனவே இந்து மதத்தின் சிறப்புக்கள்தான் என்ன ?.

(1) இந்து மதம் மற்ற மதங்களுக்கெல்லாம் காலத்தால் முந்தியது. "இவ்வுலகிலுள்ள மத நூல்களில் மிக முந்தினது இந்துமத ரிக்வேதமே" என்பது பண்டிதர் மாக்ஸ்முல்லர் கொள்கை.

(2) வேறு மதங்கள் பலவும் அவ்வவ்மதங்களை உண்டாக்கினவர் பெயரைக் கொண்டு விளங்க, இந்து மதத்தின் பிரிவு மதங்கள் ஒவ்வொன்றும் கடவுளின் பெயரைக்கொண்டே விளங்குகின்றன.

(உ—ம்) சைவம்-சிவத்தையடையும் மார்க்கம்.
வைணவம்-விஷ்ணுவையடையும் மார்க்கம்.

சிவம் என்னும் சொல்லுக்குப் "பெருஞ்சுகம்" என்பது பொருள் எனக் கிறிஸ்தவநூலாகிய தேம்பாவணியிலும் கூறப்படுகின்றது. இன்னும் மங்களம் அன்பு, நன்மை எனவும் பொருள்கள் உண்டு.

(3) "முத்தியடைவதற்கு ஏற்றமதம் எங்கள் மதமே" என யானை கண்ட குருடர்போல்தாம் கண்டதே முடிபு எனக் கூக்குரலிடாது, எப்பெயரைக் கொண்டு எங்கு நின்று வழிபடினும் அவையனைத்தையும் இறைவன் ஏற்றுக்கொள்கிறான் என்ற சமரசக் கருத்தினை வெளியிடுவது.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்".
—சிவஞானசித்தியார்.

(4) பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையைக் கொண்டது.

(5) ஆண், பெண் தன்மையை இறைவனிடம் காட்டிப் பெண்மையை இகழாது உயர்த்திக்கூறுவது.

(6) ஆண்டான்-அடிமை அல்லது தாசமார்க்கம். தந்தை-மகன் அல்லது சற்புத்திரமார்க்கம். தோழன்-தோழி அல்லது சகமார்க்கம், தலைவன்-தலைவி அல்லது சன்மார்க்கம் என்ற முறைகளிற் கடவுள் வணக்கத்தை இயல்புக்கும் தகுதிக்கும் ஏற்ப உலகுக்கு வகுத்துக் காட்டுவது.

(7) ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல முறையை விளக்குவது.

(8) இருபத்துநாலு தத்துவங்களோடு பிறமதங்கள் நிற்ப, இது முப்பத்தாறு தத்துவங்களைக் கொண்டு விளங்குவது.

(9) அருவ, உருவ, அருவுருவத் திருவுருவங்களாக இறைவனை வழிபடச் செய்வது.

(10) எல்லா மதங்களையும் அவற்றின் முடிபுகளையும் தன்னுள் அடக்கிக்காட்டி ஒரு மதத்தையும் இகழாமல் அவற்றிற்கு மேலும் திகழ்ந்து விளங்குவது.

(11) திருக்கோயில் வழிபாடு, நித்திய கர்மம் முதலியவற்றால் உடலையும், மனத்தினையும் தூய்மையாக்கி மனோவாக்குக் காயத்தினை யெல்லாம் கடவுள் வணக்கத்தில் ஈடுபடுத்தி மக்களை மாயையினின்றும் அகலச் செய்வது.

(12) முத்திநிலையை உலகியல் இல்லொழுக்க இன்பத்தோடு இணைத்து மேற்செல்ல வழிகாட்டுவது.

(13) இல்லறத்தாலும் துறவறத்தாலும் இறைவனையடையலாம் என்பது.

(14) மனிதர்களைக் கட்டுப்படுத்தாது சுதந்திரத்துடன் இறைவனை வழிபடச் செய்வது.

(15) நாஸ்திகன் முதல் திவ்விய ஞானிவரை தன்னில் இருப்பதற்கு இடம் கொடுப்பது.

(16) பெரியோர் பிறப்பு அல்லது திருவவதாரங்கள் என்றென்றைக்கும் உண்டு எனக் கூறுவது முதலியனவாகும்.

இந்துமதமானது யாரையும் அன்னியரென்று கருதுவதில்லை. "எல்லோரும் ஒரு குலம் எல்லோரும் ஒரு இனம்" "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றே இந்து மதம் அநாதிகாலம் தொட்டுக் கூறிக்கொண்டு வருகிறது. இந்தக் கொள்கை உலகமெங்கும் பரவவேண்டும். இன்றைக்கோ நாளைக்கோ என்ற யுத்த பீதி ஒரு புறம், அணுக்குண்டு சலவாயுக்குண்டு மற்றொருபுறம். இந்த நெருக்கடிகளுக்குள்ளாகி வரும் இன்றைய உலகிற்கு இந்து மதம்தான் வழிகாட்டவல்லது. எனவே இந்து மதத்தின் சாரத்தை யூட்டுவது, உண்மைகளைச் சிறப்புக்களை எடுத்தியம்புவது ஒவ்வொரு இந்துவினதும் கடமையாகும். இந்து மதக் கொள்கைகளே உலகசமாதானத்தை நிலைநாட்ட முடியும். இந்தக் கடமைகளைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் திறம்படச் செய்தவர் ஒருவரே ஒருவர்தான். அவரே இந்துமத உண்மைகளை இந் நானிலம் முழுதும் பரவச்செய்த நமது வீரத் துறவி.

ஒரு தேசத்தின் பெருமை, உயர்வு எல்லாம் அந்தத் தேசத்தில் அவதரிக்கும் மகான்களையே பொறுத்திருக்கின்றது. ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வோர் துறையிலும் பெரியோர்கள் தோன்றியிருக்கிறார்கள்தான். ஆனால் ஆத்மீக ஞானத்தை உலகிற்கு அள்ளி வீசுவதில் ஆசியாக்கண்டமே முதன்மை வகிக்கின்றது. ஆசியாவிலும் பாரத தேசமே பல பெரியார்களை, மகான்களைத் தீர்க்க தரிசிகளை, ஆத்மீகச் செல்வர்களை, வீரப்புதல்வர்களை, கொடை வள்ளல்களை, தவச்சுடர்களை, ஞானச்சோதிகளை இவ்வுலகிற்கு ஈந்த பெருமையைக் கொண்டிருக்கிறது. தனக்கென வாழாது பிறர்க்கெனவாழும் உத்தமர்கள் உதிக்கும் நாடே பாக்கியம் செய்த நாடாகும். இந்த மகான்கள் பரம்பரையிலே தோன்றிப் பழஞ் செல்வங்களைச் சீர்குலைக்காமல், புரட்சியை உண்டுபண்ணாமல், வீண்கொக்கரிப்புக் கொக்கரியாமல், நாட்டிற்கு நல்ல வகையில் நற்பணிபுரிந்து காலத்திற்கு ஏற்றவகையில் தொண்டாற்றியவர்தான் நமது விவேகானந்தத்துறவி. இவர் தொண்டு எக்காலமும் எப்பேர்ப்பட்டவர்களும் பின்பற்றக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றது. இவருடைய செயல்கள் பிறருக்கு ஒரு எடுத்துக் காட்டாகத் திகழுகின்றது. இவருடைய தொண்டு பிற்காலத்தவருக்குக் கலங்கரை விளக்கமாக இருக்கின்றது.

மகான்கள் காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு அவதரிக்கிறார்கள். அக்காலத் தேவையை நிறைவேற்றுகிறார்கள். எக்காலத்துக்கும் ஏற்றவகையில் பணியாற்றுகிறார்கள். தமது சொல்லையும் செயலையும் மற்றவர்கள் பின்பற்றக்கூடியவாறு அமைத்துக்கொள்ளுகிறார்கள். பயனை எதிர்பாராது பணியாற்றுவதே இவர்களது குறிக்கோளாக இருக்கின்றது. இதுவரை எத்தனையோ மகான்கள் அவதரித்த காலங்களை எண்ணிப்பார்த்தோமானால் மகான்களின் வருகை உலகிற்கு எவ்வளவு அவசியமென்பது புலப்படும். உத்தமர்கள் உலகில் உதிப்பதன் முன் ஞாலத்தை அஞ்ஞான இருள் மூடிக் கொண்டிருக்கும். அர்த்தமற்ற அநாகரீகப் பழக்க வழக்கங்களையெல்லாம் மக்கள் கைக்கொண்டிருப்பர். நாட்டில் ஒற்றுமை நடுவுநிலைமை முதலியன சீர்குலைந்திருக்கும். உண்மை, அன்பு என்னும் விளக்குகள் அணைந்து விடுகின்றன. இந்த நிலையிலிருந்து உலகினை நீக்கவே தோன்றுகிறார்கள் உத்தமர்கள். கண்ணபிரான், புத்தபெருமான், நபிகள் நாயகம், ஏசுநாதர், சம்பந்தர், அப்பர், காந்தியடிகள் தோன்றிய காலங்களை எண்ணிப்பார்த்தோமானால் இவர்களின் வருகை எவ்வளவு அவசியமென்பது நன்கு புலப்படும்.

சென்ற நூற்றாண்டில் பாரதநாடு மகமதியர்களின் மமதையினாலும், அன்னியர்களின் ஆதிக்க அட்டூழியங்களினாலும் உருக்குலைந்து, பிளவுபட்டுக் கிடந்தது. வியாபாரத்துக்கென்று இந்நாட்டில் கால் வைத்த அன்னியர் விபரீத முறையில் தம் மதத்தை நம்மக்கள் மீது திணித்தனர். பாரத மக்கள் கல்வியறிவற்றவர்கள், சீர்திருத்தம் சிறிதுமில்லாதவர்கள் அஞ்ஞானிகள், என்று கூறி மக்களை மயக்கினர். மக்கள் மதம் மாறினர். இந்திய நாட்டவரும் சுய உணர்ச்சியைப் பறிகொடுத்தனர். சீர்கெட்டனர். மக்கள் தம் நிலைமை இழந்து தம் மதம் மறந்து, தேசீயத்தைத் துறந்திருந்தனர். நாட்டில் இந்த நிலைமை தாண்டவமாடிக்கொண்டிருக்கும் போதுதான் 12-1-1863 ல் நமது சுவாமிகள் தோன்றியது பாரதநாடு செய்த நற்றவமேயாகும்.

மனிதகுல மாணிக்கமென அவதரித்த செல்வக் குழந்தைக்கு நரேந்திரர் என்று நாமமிட்டனர் பெற்றோர். வடமொழி, வங்காளம், ஆங்கிலம், சங்கீதம் முதலிய பல கலைகளைப்பயின்று விவேகம் நிறைந்த வாலிபனாக மாறினார் நமது நரேந்திரர்.

ஒரு நாள் ஒரு கூட்டத்திலே பாதிரி ஒருவர் இந்து மதத்தை நிந்தித்து விக்கிரக வணக்கத்தை எதிர்த்து எள்ளி நகையாடிக் "கல்லிலும் செம்பிலும் செய்யப்படும் உங்கள் விக்கிரகங்களைக் காலால் உதைத்தால் என்ன செய்யும்" என்றார். கைகட்டி, வாய்

பொத்திக் கேட்டுநின்றனர் கூட்டத்திலிருந்தோர். "உங்கள் தெய்வத்தை நான் இழித்துக் கூறின் அது என்ன செய்யும்" என்று ஒரு வீரக்குரல் கூட்டத்தின் மத்தியிலிருந்து கிளம்பிற்று. பாதிரியார் பாதிப்பிரசங்கத்தில் நிறுத்தி மூட்டையைக் கட்டினர். இந்த வீரக்குரல் கொடுத்த அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மகன் யார்? அவனே நமது நரேந்திரர். அடிமை நாட்டில் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பாதிரிக்கு ஆண்மையுடன் பதிலிறுத்த பண்புதான் என்னே!.

சாதாரணமாக யுவர்களுக்கு இளமையின் முறுக்கினல் சில அபூர்வ சிந்தனைகள் மனதில் உதிப்பது இயற்கையே. அது போல் நமது நரேந்திரருக்கும் கடவுள் ஒருவர் உண்டா? நாம் அவரைக் காண முடியுமா? என்ற பல கேள்விகள் தோன்றின. சந்தேகம் தீர்ப்பதற்கு ஏற்ற ஒரு குருவைத் தேடினர். கண்டார். அக்குருபகவானே உலகம் போற்றும் உத்தமர் ஸ்ரீ ராமக்கிருஷ்ணராகும். ராமக்கிருஷ்ண குருதேவரே நரேந்திரரது ஞானக்கண்களைத் திறக்கச் செய்தார். இந்து மதத்தின் தத்துவ ஞானங்களை யெல்லாம் ராமகிருஷ்ணரிடமிருந்து பெற்ற நரேந்திரர் விவேகானந்தரானர். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யெல்லாவற்றையும் துறந்து, பிரமச்சாரிய விரதம் பூண்டு, பிறந்த தேசத்திற்காக, மதத்திற்காக உழைக்க முற்பட்டார். காசி முதல் கன்னியாகுமரி வரை, யாத்திரை செய்தார். இதனல் நாடு அன்று இருந்த நிலையை நன்கு கண்டறிந்தார். கன்னியா குமரியிலிருந்து வடக்கு நோக்கிப் பரந்து கிடந்த பாரத தேசத்தின் சீரழிவைக் கண்டு நெஞ்சம் குமுறினர். இங்கே தோன்றிய உணர்ச்சிகள்தான் சுவாமிகளை அமெரிக்க நாட்டிற்குக் கவர்ந்து சென்றது. இவர் அமெரிக்கா செல்வதற்குச் சகல ஏற்பாடுகளையும் தமிழ்நாடே செய்து கொடுத்தது.

"போகமே வாழ்க்கை" யென்று சல்லாபித்துக் கொண்டிருக்கும் அமெரிக்க நாட்டில் இந்து மதத்தின் புராதனத்தையும், பெருமைகளையும், சிறப்புக்களையும், எடுத்துச் சொல்லியதுமல்லாது அந்நாட்டவர்க்கு இந்தியர்களது ஆத்ம ஞானத்தை, அழியாச் செல்வத்தை அள்ளிக் கொடுத்து வந்தார். நமது துறவிகளுக்கு அமெரிக்க நாட்டினர் பசுக்களையோ பன்றிகளையோ பதனம் பண்ணப்பட்ட மாமிசமாக்கி டின்களில் அடைத்து ஏற்றுமதி செய்யும் யந்திரத்தைக் காட்டி "அமெரிக்கர்களின் மூளைத்திறமையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்று கேட்டனராம். துறவிகள் சட்டென்று "இதோ டின்களில் அடைக்கப்பட்டிருக்கும் பசுவையோ பன்றியையோ ஒரு வாயிலில் போட்டு மறு வாயிலில் உயிருடன் ஒரு பசுவையோ பன்றியையோ தரக்கூடிய ஒரு யந்திரத்தைக் கண்டுபிடிப்பார்களானல் நான் அவர்களை மனமார வணங்குவேன்" என்றாராம். இந்தியத் துறவியினது வீரகர்ச்சனைகளை யெல்லாம் அக்கால அமெரிக்க பத்திரிகைகள் புகழ்ந்து போற்றிப் பின்வருமாறு பிரசுரஞ் செய்தன.

"நியூயார்க் தூதன்" (New York Herald) என்ற பத்திரிகை சர்வமத மகாசபையில் பேசியவர்களில் விவேகானந்தரே மிகவும் சிறந்தவரென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. அவர் பேசியதைக் கேட்ட பிறகு கேட்டபிறகு இந்துக்களுக்கு உபதேசிக்க இங்கிருந்து பாதிரிகளை அனுப்புவது பெரும் முட்டாள்தனம் என விளங்குகிறது!.

வேறொரு பத்திரிகை "ஒவ்வொரு கிறிஸ்தவச் சர்ச்சிலிருந்தும் பிஷப்புகளும் உபதேசியார்களும் இங்கு வந்திருந்தார்கள். அவர்களெல்லோரும் விவேகானந்தரின் பிரசங்கமாகிய வச்சிராயுதத்தின் முன் நிற்க மாட்டாது விழுந்து விட்டார்கள்".

செல்வம் கொழிக்கும் நாட்டின் பல சீமான் சீமாட்டிகளைச் சீடராக்கினர். குருதேவரின் பெயரால் அந்நாட்டிலேயே பல ஆச்சிரமங்களை நிறுவிவிட்டு ஐரோப்பாவினூடாகத் தாய் நாடு திரும்பினர். கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

திக்கு விஜயம் செய்து திரும்பிய தீரருக்கு நமது கொழும்பு நகரமே முதன்முதலில் சிறந்த வரவேற்பளித்தது.

தாய் நாட்டிற்கேகிய துறவிகள் குருதேவரின் பெயரை நிரந்தரமாக நிலைநாட்ட வெண்ணி 1-5-1897 ல் "ஸ்ரீராமகிருஷ்ண மடம்" என்னும் ஸ்தாபனத்தை ஏற்படுத்தினர். இம்மடத்தார் அகில உலகமும் பரவித் திறம்படத் தொண்டாற்றுவது யாவரும் அறிந்ததேயாகும். இது சர்வ சமயங்களின் சித்தாந்தங்களையும் ஏற்று ஆராயும் ஸ்தாபனமாக இன்று விளங்குகின்றதல்லவா? அண்ணல் காந்தியடிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இந்தச் சர்வமத சமரசக் கொள்கையல்லவா? இராமக்கிருஷ்ண விவேகானந்த சுவாமிகளது தீர்க்கதரிசனம் தான் என்னே!.

"நாம் யார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று முழங்கிய நாவுக்கரசர் தோன்றிய அதே பாரத பூமியிலே

(30 ம் பக்கம் பார்க்க)

# புதிய வண்டு விடுதூது

(வானொலிக் கவிதைப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றது)

அல்வாயூர் மு. செல்லையா

("அகப்பொருள் அல்லது புறப்பொருள் பற்றியே கவிதை இயற்றப்படவேண்டும்" என்ற இலங்கை வானொலி நிலையத்தாரின் நிபந்தனைப்படி அகப் பொருட்டுறையிலே ஆக்கப்பெற்ற இக்கவிதை சென்ற தைப்பொங்கல் தினத்திலே ஒலிபரப்பப்பட்டது).

(சென்னை நகரிலே, அரசினரின் நிலையமொன் றிலே, உத்தியோகக் கடமையாற்றும் இலங்கை வாலிபனொருவன், கொழும்பு மாநகரில் வசிக்கும் தன் செல்வக்காதலிக்குச் செய்தியனுப்பியதாக யாக்கப்பெற்ற புதிய வண்டுவிடு தூது.)

### கட்டளைக் கலித்துறை

### வண்டை விளித்துக் கூறுதல்

1. ஆரு மறிவின் விளைவா லுலக மதிசயிக்க
வேரும் மதிசெய்து விண்ணிடைப் போக்குவிஞ் ஞானிகளும்
தேருத வித்தையிற் றேர்ந்து மலரிடைத் தேன் திரட்டும்
பேருர் கருவண்டு கேளாய் நினக்கொன்று பேசுவனே.

### காதலியிடம் தூதுபோகுமாறு வண்டினை வேண்டுதல்

2. உன்வாயில் தேனினு மென்னுள்ளந் தங்கிய ஒண்டொடியாள்
பொன்வாயில் நீரே சுவையினின் மிக்கது பொய் யறியா
மென்வாய்ப் பொறிவண்டு நீதயை செய்தந்த மெல்லியல்பால்
இன்வாய் திறந்தொரு தூதினுக் கேக இசை குதியே.

3. காலை அரும்பிப் பகற்போது மேவிக் கறுத்து வரும்
மாலை மலருமந் நோய்க்கு மருந்தெனும் மாதரசை
ஆலைக் கரும்பு மொழியாளை மான்விழி யாளையந்த
வாலைப் பருவ வயதாளை ஆற்றுதி வண்ண வண்டே.

4. நீங்கில் தெறலுங் குறுகிடில் தண்ணென்று நின்றிடலும்
தாங்கிய தீயுடைக் காதலி யாளையென் தண் ணமுதை
வாங்கும் புருவிற் கீழிரு கண்ணம்பு வாய்த் தவளை
ஆங்குக் கொழும்பினிற் கண்டிது கூறல் அற முனக்கே.

### காலம் கடத்திக் கொண்டிருக்கும் திகதிக் கடதாசிகளைப் பார்த்து இகழுகின்ற காதலியின் கோபநிலை

5. பஞ்சார்ந்த மெத்தையிற் பாலும் புளிக்கப் படுத்திருந்து
துஞ்சாத கண்ணினள் என்வர வெண்ணிச் சுவரில்தொங்கும்
எஞ்சாத் திகதிக் கடதாசி தம்மை இகழ்ந் திகழ்ந்து
"நஞ்சான நீவிர் தொலைவீர்" எனச்சினம் நண்ணுவளே.

### இன்னும் ஒருமாதம் உண்டெனல்

6. ஆறு மதியெனுங் காலம் வரைக்கும் அமர்வ னென்றே
தேறும் படிபத்தி ரத்தினிற் கையொப்பஞ் செய்துவிட்டேன்
வேறு வழியில்லை இன்னு மொருதிங்கள் மேவு மெனக்
கூறுதி காதலிக் குற்ற துயரங் குறைவதற்கே.

'மதி : திங்கள், மாதம்

### பயணத்திற்கு வழிகூறல்

7. சென்னை நகரிருந் தீழத்தைச் சேருந் திற முரைப்பேன்
மன்னுங் கடலொன் றிடையுண்டு நீதாண்ட வன்மையிலாய்
அன்னதோர் வீரன் நவரத்ன சாமி அவனையன்றி
மின்னும் புகழ்பெற நீந்துநர் யாரந்த வெங் கடலே.

**கடவுச்சீட்டு, விசாப்பத்திரம் முதலியன பெற்று முறைப்படி பயணம் அனுப்புகில் காலம் கடக்கும் எனல்**

8. சேரும் பயணக் கடவுசீட் டாதிய தேடியுன்னைச்
சோருமென் காதலிக் குத்தூது போக்கத் துணிகுவனேல்
தேரும் பலதிங்கள் சென்றிடு மாதலின் தேனளியே
சாரும் புதுவழி அந்தரங் கத்தினிற் சாற்றுவனே.

அளி : வண்டு. அந்தரங்கம் ; இரகசியம்

**ஒரு புதுவழி கொண்டு பலாலிக்குப் போவெனல்**

9. இங்கிருந் தேயெம தீழத்திற் கேகும் விமானமதில்
அங்குயர் மேற்புற மூலையில் நீயு மமர்ந்தொளித்துச்
சங்கை யிலாது சுகமே பயணந் தனைப்புரிந்து
பொங்குங் கடல்கடந் தங்குப் பலாலியிற் போகுதியே.

சங்கை : ஐயம். (தொடரும்)

## வீரத்துறவி ..............

(28 ம் பக்கத் தொடர்ச்சி)

உதித்த நம் துறவி சேவை யொன்றே குறிக்கோளாகக் கொண்டு கடமையாற்றினார். பாமரமக்களிடம் அபார அன்பு காட்டினார். இடைக்காலத்தில் இந்து மதத்தில் புகுந்த சாதிக் கொடுமையைப் பலமாகக் கண்டித்தார்.

இறுதி நாளாகிய 4-7-1902 ல் கூட " விவேகானந்தன் எண்ணத்தை எவரும் இன்னும் அறியவில்லை. ஆனாலென்ன? இன்னும் எத்தனையோ விவேகானந்தர்கள் இம்மடத்தினின்றும் தோன்றுவார்கள். நானும் தோன்றுவேன் " என்றார். அப்பொழுது அவருக்கு வயது முப்பத்தொன்பதே. ஆ ! இன்னும் சில காலம் வாழ்ந்திருந்தால் என்ன அருமையான தொண்டினை யெல்லாம் செய்திருப்பார். விவேகானந்தரைப் போலே வேறொருவருமில்லை இனிமேலே .

விவேகானந்த சுவாமிகளையும் காந்தி மகாத்மாவையும் பலவகைகளில் ஒப்பிடலாம். ஏறக்குறைய இருவருடைய கொள்கைகளும் தொண்டும் ஒரு தன்மையனவே. இருவரும் வெளிநாடுகளுக்குச் சென்று வெற்றிச் சங்கு ஊதிய பிறகுதான் நாம் அவர்களது பெருமையை உணர்ந்தோம். குருட்டு நம்பிக்கை, போலித்தன்மை, வெளிப்பகட்டு முதலியவைகளில் ஊறிப்போய் இருந்த இந்நாட்டு மக்களைச் சுய உணர்ச்சி உண்டாகும்படி செய்தவர்கள் இந்த இருவரும் தான். இருவரும் இலட்சியத்துக்கென்றே வாழ்ந்தனரென்றால் மிகையாகாது. காந்தியும் நமது சுவாமிகளும் தீண்டாமைக்குப் பரம விரோதிகள். ஏழைகளுக்காகக் கண்ணீர் வடித்தவர்கள். இருதவப் புதல்வர்களும் பாரத நாட்டின் இரு சக்திகள் என்றே சொல்ல வேண்டும்.

மக்களுக்காக, மதத்துக்காக தமது வாழ்வையே தியாகம் செய்த பெரியாருக்கு நாம் செய்யக்கூடியதென்ன ? மீண்டும் அவரே தோன்றக் கடவுளைப் பிரார்த்திப்போமாக. நாமும் அவர் தொண்டைப் பின்பற்றிப் பணியாற்ற வேண்டும்.

" இந்துமத உண்மைகளை இந்நானிலத்தில் இயம்பிடவே வந்தவிவே கானந்தரை வாழ்த்து ".

## இலங்கை மக்கள் ஒன்று ............

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

நான் பாராட்டுகிறேன். இலங்கைக்கு உதவியும் அனுதாபமும் காட்டிய நாடுகளுக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.


வெள்ள அகதிகளுக்கு உணவு, வீடு, உடை ஆகியவைகளைக் கொடுப்பதே இப்பொழுது நம்மை எதிர் நோக்கியுள்ள பிரச்னை. இப்பிரச்னையைச்சமாளிப்பதில் அரசாங்கம் தற்பொழுது ஈடுபட்டிருக்கிறது.


சில தனிப்பட்ட தாபனங்கள் பாகுபாடு காட்டியதாகக் கூறப்படுவது உண்மைதான். மனித இயற்கையின் பிரகாரம் அந்த தாபனங்கள் நிவாரண உதவியளித்தன என்றாலும் அவ்விஷயத்திலும் அரசாங்கம் ஓரளவு கட்டுப்பாடு வைத்திருந்தது.

புகையிரத, வீதிப் போக்குவரத்துத் தொடர்புகளை ஏற்படுத்துவது அரசாங்கத்தை எதிர் நோக்கியுள்ள மற்றொரு பிரச்னையாகும். வெள்ளஆபத்து இப்பொழுது நீங்கி விட்டதால் வீடிழந்தவர்களுக்கு வீடுகளும், வேலைகளும் கொடுப்பது அவசியம். ஆயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்குப் புனர் வாழ்வளிக்கச் சிறிது காலம் பிடிக்கும். இவ்விஷயங்கள் பற்றித் திட்டமிடும் சபை ஆராய்ந்து வருகின்றது.

என்றாலும் வெள்ளத்தால் ஓரளவு நன்மையும் ஏற்பட்டிருக்கிறது. அதாவது மக்கள் ஐக்கியப் பட்டிருக்கின்றனர். இக்கஷ்டத்தின் பயனாக ஐக்கிய இலங்கையர் சமுதாயமொன்று ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இத்தகைய இன்னல்களிலிருந்து தலையெடுத்து, எங்கள் தேசத்தின் சுபீட்சத்துக்காக ஒத்துழைக்கத் தீர்மானித்து ஒன்றுகூடுவோமாக.





மேலே : கல்லோயாப்பள்ளத்தாக்கு வெள்ளத்துள் அமிழ்ந்திய காட்சி.
கீழே : ஆனையிறவு உப்பளங்கள் வெள்ளத்துள் மூழ்கின.

## வெள்ள நிவாரணத்துக்கு ......

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

படை மைதானத்திற்குத் திரும்பினுர். அங்கு நின்று மரியாதை அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

வெள்ள நிவாரண வேலையிலீடுபட்ட விமானிகளைச் சந்தித்த பிரதமர், இக்கைங்கரியத்தை மிகவும் திற மையாக நடத்தி, இந்நாட்டிற்கு உதவி புரிந்தமைக் காக அவர்களுக்குத் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

அமெரிக்க மத்திய கிழக்குப் படைத் தலைவரான அட்மிரல் எச். எம். பிரிக்ஸ் அவர்களும் இலங்கை யின் அமெரிக்க ஸ்தானிகர் திரு. மக்ஸ்வெல் எச். கிளக் அவர்களும் சொற்பொழிவாற்றினர்.

திரு. கிளக் தமது பேச்சில் அமெரிக்கா இலங்கையின் இக்கட்டான நிலைகண்டு இரங்கியதால், இலங்கையிடம் தனக்குள்ள நட்புரிமையைக் காட்டு வதற்காக உதவிக்கு வந்தது. "உடுக்கை யிழந் தவன் கைபோலவாங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற கருத்து இப்பொழுதுதான் உண்மை யாகின்றது எனக் கூறினுர்.

அட்மிரல் பிரிக்ஸ், தான் இரு மாதங்களுக்கு முன் இலங்கையிலிருந்ததாகவும் இங்குள்ள மக்க ளின் விருந்தோம்பும் பண்பு அவர் மனதைக் கவர்ந்ததென்றும், இலங்கையின் அவலக்குரல் கேட்டதும் உதவி புரிய விரைந்து வந்ததாகவும் குறிப்பிட்டார்.

புதன்கிழமையன்று, வெள்ள நிவாரண வேலை யிலீடுபட்ட இந்திய விமானப்படையினர், கொழும்பு குதிரைப்பந்தய மைதானத்தில் பரசூட்டிலிருந்து பாய்தல்போன்ற சாகச விளையாட்டுக்களைப் பெருந் திரளாகக் குழுமியிருந்த மக்களுக்குக்காட்டி, பலத்த கரகோஷத்துக்கிடையே இலங்கை மக்களிடமிருந்து விடை பெற்றனர்.

இந்திய விமானப் படையினர் ஆகாயத்திலிருந்து பிரதமரின் வர்ணப்படங்களை வானில் பறக்கவிட்டுப் பிரதமருக்கு பிறந்ததின வாழ்த்துக் கூறினர். ஒரு ஹெலிகொப்டரும், 6 டகோட்டா விமானங்களும் பிரதமரின் படங்களை மேலிருந்து தூவின. படத்தில் கீழ்க்காணும் வசனம் பொறிக்கப்பட்டிருந்தது.

"கௌரவ திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயக்கா—இந்திய விமானப்படை உங்களின் பிறந்த தினத்தில் தனது வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கிறது.

இப்படி வாழ்த்துக்களைக் கண்ட பிரதமர் "இந்திய விமானப்படை என்னை இவ்விதம் வாழ்த்தியது அவர்களின் பெருந்தன்மையையே காட்டுகிறது." எனப் பிரஸ்தாபித்தார்.

இந்திய விமானப்படையின் சாகச விளையாட்டுக்க ளைப் பார்வையிட பிரதமர் மாத்திரமன்றி, வெள்ள நிவாரண விசேஷ கமிஷனர் திரு. ஷேர்லி அமர சிங்காவும், வெள்ள நிவாரணக் கமிட்டித் தலைவர் திரு. சரத் விஜயசிங்காவும், எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவும், வெளிநாட்டு ஸ்தானிகர்களும் பல பிரமுகர்களும் வந்திருந்தனர். சனக்கூட்டம் கட்டுக்கடங்காமல் அங்குமிங்கும் ஓடிய தால், பொலிசார் அவர்களைக் கட்டுப்படுத்தமுடியாமல் போயிற்று. எனவே ஒரு வீரர் பரசூட்டில் சனக் கூட்டத்தின் மத்தியில் இறங்க நேரிட்டது.

## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|
| 1956 ம் ஆண்டின் 21 ம் இலக்க வெடிமருந்துச் சட்டம் .. | 0 45 | 0 10 |
| 1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க, முஸ்லீம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைச் சொத்துக்கள் அல்லது வக்புகள் சட்டம் .. | 0 85 | 0 20 |
| 1936 ம் ஆண்டின் 16 ம் இலக்கம், ஒத்துழைப்புச் சங்கங்களின் அமைப்பு முறையும் அதிகரிப்பையும் பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திரட்டித் திருத்துவதற்கான சட்டம் .. .. | 0 25 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்கச் சட்டம் ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம் .. .. | 0 40 | 0 20 |
| கிராமச் சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 148) - மறுபதிப்பு .. | 1 30 | 0 25 |
| 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்கம் கிராம சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 1953 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம் .. .. | 0 35 | 0 15 |
| 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்கச் சட்டம் கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் .. .. | 0 45 | 0 20 |
| 1946 ம் ஆண்டின் 32 ம் இலக்கச் சட்டம் நீர்ப்பாசனத்தைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்கான சட்டம் .. | 1 10 | 0 20 |
| 1951 ம் ஆண்டின் 13 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டம் .. | 1 50 | 0 20 |
| 1954 ம் ஆண்டின் 31 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்து (திருத்த)ச் சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| அத்தியாயம் 104 தத்துவப் பத்திரங்கள் .. .. | 0 20 | 0 10 |
| அத்தியாயம் 120— வியாபாரப் பெயர்கள் .. .. | 0 40 | 0 10 |
| 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் .. | 1 35 | 0 20 |
| 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் | 0 15 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 30 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் | 0 10 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம் - தாங்கள் செய்துவரும் வேலைக் கிரமத்திற் சேதமடையும் வேலையாட்களுக்கு நஷ்ட பூர்த்திப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. | 0 35 | 0 20 |
| 1935 ம் ஆண்டில் ஏற்படுத்திய வேலையாட்கள் நஷ்ட பூர்த்தி விஷய ஒழுக்க விதிகள் .. .. .. | 0 35 | 0 20 |
| அத்தியாயம் 91— நொத்தாரிஸ்மார் (1938 ல் திருத்தியமைக்கப்பட்டது) | 1 30 | 0 35 |
| 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான ண்டடுத்தலுக்காகவும் பராதீனப்படுத்துதலுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கான சட்டம் .. .. | 0 55 | 0 35 |
| 1946 ம் ஆண்டின் 3 ம் இலக்கச் சட்டம் – ஊர்ச்சங்கங்கள் .. | 2 90 | 0 35 |
| 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டம் - வேலையாட்கள் சம்பளச் சங்கச் சட்டம் .. .. .. .. | 0 50 | 0 20 |
| அத்தியாயம் 95, கலியாணப் பதிவுச் சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க கலியாணப் பதிவுத் திருத்தச் சட்டம் | 0 50 | 0 10 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற்பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.